கண் வைத்திய
நிபுணர்களினால்
சிபார்சு செய்யும் கண்ணாடி
களைச் சரியாகக்
கொடுப்பவர்கள்.

எஸ்.எம்.பெர்ணண்டோ
580. ஆஸ்பத்திரி வீதி,
இலங்கை வங்கி அருகாமை
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

கடர் 5: பிரமோதூத ௵ சித்திரை ௴ 13 ௳ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1410 றம்ழான் பிறை 29 (26-04-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 70

S.M.Fernando
OPTICIANS

SIGHT TESTED PRESCRIPTIONS
ACCURATELY DISPENSED
580 HOSPITAL ROAD,
NEAR BANK OF CEYLON

# மே தினத்தில் நகரில் எழுச்சி நிகழ்ச்சிகள்!

## விடுதலைப் புலிகள் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 26

**மே தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் கண்காட்சிகள், பேரணிகள், பொதுக் கூட்டங்கள் உட்பட பல்வேறு எழுச்சி மிகு நிகழ்ச்சிகளுக்கு விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி ஏற்பாடுசெய்துவருகிறது.**

**இந்த நிகழ்ச்சிகளில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியுடன் இணைந்து பங்குபற்றுமாறு மற்றைய பொது அமைப்புக்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.**

இந்த விழாவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியுடன் வேறு அமைப்புகளும் சேர்ந்து கொள்ள முடியும்.

நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில்இதற்கான அழைப்பு சகல அமைப்புக்களுக்கும்விடுக்கப்பட்டது.

நேற்றுக்காலை கோண்டாவிலில்உள்ள மக்கள் முன்னணியின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் நடந்த இந்த பத்திரிகையாளர் மாநாட்டில் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், திரு.டொமினிக், செல்வி. பாரதி, திரு. கண்ணன், ஆகியோர் கலந்து கொண்டனர்.

பத்திரிகையாளர் மாநாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

மே 1 ஆம் திகதி காலை 8 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் ஓவியம், மற்றும் கடந்த கால நிகழ்வுகள் பற்றிய கண்காட்சி ஒன்றும் நடைபெறும். பிற்பகலில் எழுச்சி ஊர்வலங்கள் குடா நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் ஏற்பாடு செய்யப்பட்டுள்

(5 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் கைப்பிடிக்குள் இலங்கை அரசு!

## சபையில் சுதந்திரக் கட்சி எம்.பி

விடுதலைப்புலிகள்இலங்கை அரசை தமது கைப்பிடிக்குள் வைத்திருக்கிறார்கள்.

-ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த திரு. பி. வி. குணரத்ன நேற்று நாடாளுமன்றில் ஒத்திவைப்பு வேளையின் போது கேள்வி எழுப்புகையில் இப்படிக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது;-

கொழும்பில் தீவிரவாதக் குழு ஒன்று வந்திருக்கிறது என்று தகவல் வெளியாகி

(5 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க உறுப்பினர் எந்த மேதின விழாவிலும் பங்கு பற்றலாம் எனத் தாராளம்!

கொழும்பு, ஏப்ரல் 26

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் தாம் விரும்பிய மேதினக் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம்.

கட்சியின் மேதின விழாவில் தான் கலந்து கொள்ள வேண்டும் என்ற கட்டுப்பாடோ, நிர்ப்பந்தமோ கிடையாது.

இந்தத் தகவல்களை ஐ. தே. கட்சியின் மே தினக் கொண்டாட்டக் குழுத் தலைவரான அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தெரிவித்தார்.

இதேவேளை, ஐக்கிய தேசியக்கட்சி மேதினவிழா ஏனைய கட்சிகளின் மேதின விழாவுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்று ஜனாதிபதி அறிவுறுத்தி இருக்கிறார்.

ஐ. தே. க. மேதின விழாவில்எவரும் தனிநபர்களையோ மாற்றுக் கட்சிகளையோ கண்டித்துப் பேசக் கூடாதென

[ 5 ஆம் பக்கம் பார்க்க]

# கோட்டை ரயில் நிலையத்தில் தமிழ் இளைஞர் மீது சூடு!

## சுட்டவர் தப்பியோட்டம்

கொழும்பு, ஏப் 26

மட்டக்களப்பு ரயிலில் வந்து கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் இறங்கிய தமிழ் இளைஞர் ஒருவர் மீது இனந்தெரியாத நபர் ஒருவர் திடீரென துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர் உடனே ஓடித் தலைமறைவாகிவிட்டார்.

படுகாயமுற்ற இளைஞர் தற்போது கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

காயமுற்ற இளைஞர் புளொட் இயக்கத்தைச் சேர்ந்தவர் எனக் கருதப்படும் கந்தையா பத்மநாதன் என பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## ★ எல்லாம் தமிழில்!

யாழ்ப்பாணம், ஏப். 26

எதிர் வரும் மே முதலாம் திகதி தொடக்கம் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பாடசாலை அதிபர்கள் தமது சகல அலுவல்களையும் தமிழிலேயே செய்யவேண்டும் எனப் பணிக்கப்பட்டுள்ளனர்.

இதுசம்பந்தமாக மாவட்டக் கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் விடுத்துள்ள சுற்றுநிருபம் ஒன்றில் சகல கடிதத் தொடர்புகளும், கோவைக் குறிப்புகளும், விதப்புரைகளும், காசோலைகளும் தமிழில் எழுதப்பட வேண்டும் என உத்தரவிட்டிருக்கின்றார்- [அ-9]

## கொழும்பில் தான் என்கிறார் அமைச்சர்

கொழும்பு, ஏப் 26

சார்க் மாநாடு எப்படியும் கொழும்பிலேயேநடைபெறும் என்று அமைச்சர் திரு. ஹரோல் ஹேரத் தெரிவித்தார்.

மாநாடு மாலைதீவில் நடைபெறுமா என்று கேட்கப்பட்ட கேள்விக்குப் பதில் அளிக்கையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். [உ 2]

## ஞாயிறன்று மின் தடை

யாழ்ப்பாணம், ஏப் 26

எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை மின்தடை ஏற்படும்.

சுன்னாகம் - யாழ்ப்பாணம் 33 கேவி லைனில் அவசர திருத்த வேலைகள் செய்யப்பட இருப்பதே இதற்குக் காரணம் ஆகும்.

அன்றைய தினம் யாழ் நகரில் அநேக பகுதிகளுக்கு மின்சாரம் இருக்காது என்று மின்சார சபை அறிவித்துள்ளது. (இ)

# ஆயுதங்களைக் கைவிடாவிடினும் பேச்சுக்கு எவ்வித இடையூறுமில்லை

## புலிகள் பற்றிய கேள்விகளுக்கு ரஞ்சன் பதில்

கொழும்பு, ஏப்ரல் 26

விடுதலைப் புலிகள் ஆயுதங்களை உடனடியாகக் கீழே வைக்கத் தயாராக இல்லாவிட்டாலும் எமது இராணுவ, பொலீஸ் படைகளில் அவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். அதற்கு சில காலம் செல்லலாம்.

இவ்வாறு கூறினார் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா.

நேற்று நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்பு வேளையின் போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

அரசு — புலிகள் பேச்சு

**நாடாளுமன்றம்**

வார்த்தை குறித்து பொது மக்கள் எவரும் கோபாவேசத்துடனோ, பயத்துடனோ இல்லை. அப்படி எமக்குச் செய்தி ஏதும் கிடைக்கவில்லை. (சபையில் கூச்சல்)

ரஞ்சன்:- தெற்கில் வன்செயல்கள் குறைந்துவிட்டன. நாடு அமைதியாகஇருக்கிறது. (எதிர்க்கட்சியினரைப் பார்த்து) சட்டத்தரணிகளாக இருக்கும் உங்களில் பலருக்கு நீதிமன்றங்களில் ஆஜராக முடியாத அளவுக்கு கிரிமினல் சம்பவங்கள் குறைந்து—நாடு அமைதியாக இருக்கிறது.

விடுதலைப் புலிகள் குறித்து நீங்கள் அநாவசியமாக எழுப்பும் கேள்விகளுக்கு கூட நாம் விரைவில் முற்றுப்புள்ளி

[5 ஆம் பக்கம் பார்க்க]

## ஜீ. சீ. ஈ [உயர்தரப்] பரீட்சை:

## ஹாட்லி மாணவருக்கு மாகாணத்தில் அதிக புள்ளி!

கொழும்பு, ஏப். 26

கடந்த டிசம்பரில் நடைபெற்ற ஜீ. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில் வடமாகாணத்தில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர் என்ற தகுதியை பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியைச் சேர்ந்த மாணவன் கே. அமிர்தகுமார் பெற்றிருக்கிறார்.

இவர் நான்கு பாடங்களிலும் அதிவிசேட சித்தி ['ஏ'] பெற்றவர்என்பது குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மாகாணத்தில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றவர் என்ற தகுதி திருகோணமலை இந்துக்கல்லூரியைச்சேர்ந்த ஆர். இராமச்சந்திரன் என்ற மாணவருக்குக் கிடைத்திருக்கிறது.

இந்தப் பரீட்சையில் மாகாணமட்டத்தில் ஆகக் கூடுதலான புள்ளிகளைப் பெற்ற பத்து மாணவ, மாணவிகளுக்கு இலவசமாக ஆஸ்திரேலியாவில் ஒருவார கால சுற்றுலாவை மேற்கொள்ள வசதி செய்துகொடுப்பது என அரசு முடிவு செய்திருப்பது தெரிந்ததே.

இந்தத் திட்டத்தின் கீழ்

[5 ஆம் பக்கம் பார்க்க)

## பஸ் விபத்தில் இளைஞன் பலி!

கொழும்பு, ஏப்ரல் 26

அட்டனிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ் ஒன்றும் நாவலப்பிட்டியிலிருந்து அட்டன் நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ் ஒன்றும் கினிகத்தேனையில் மோதி விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்தில் 19 வயது இளைஞர் ஒருவர் மரணமானார்.

15 பேர் ஆபத்தான நிலையில் நாவலப்பிட்டி, கண்டி ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டனர்.

இறந்த இளைஞர் அடுத்த மாதம் திருமணம் செய்ய இருந்தவர் என்று கூறப்படுகிறது. (உ-2)

# காவலில் உள்ளோரில் சிலர் விரைவில் விடுதலை ஆவர்

கொழும்பு. ஏப்ரல்26

அவசர காலச் சட்டத்தின் கீழ் தற்போது 12 ஆயிரம் பேர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் பாரதூரமான குற்றங்களைச் செய்யாதவர்கள் விடுவிக்கப்படுவார்கள்.

பாதுகாப்பு இணை அமைச்சரும் பெருந்தோட்டத் துறை அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்னா நேற்று நாடாளுமன்றத்தில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். (உ-2)

## விமானங்கள் வீழ்த்தப்பட்டன

இஸ்லாமபாத், ஏப்ரல் 25

காபூல்அரசுக்குச்சொந்தமான இரண்டு போக்குவரத்து விமானங்களை கொஸ்ற் நகருக்கு அருகில் சுட்டு வீழ்த்தியதாக ஆப்கன் கெரில்லாக்கள் தெரிவித்தனர்.

**நோன்பு திறக்கும் நேரம்**

26 - 4 - 90

ஸஹர் முடிவு 4-25

நோன்பு திறக்கும் நேரம் - 6-20

## யாழ்ப்பாணத்தில்

## பொலீஸ் ஆள் திரட்டல் வெள்ளி, சனி நடைபெறாது

யாழ்ப்பாணம், ஏப்ரல் 26

யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுவரும் பொலீஸுக்கான ஆள்திரட்டல் நேர்முகப் பரீட்சைகள் நாளை வெள்ளிக்கிழமையும் மறுதினம் சனிக்கிழமையும் நடைபெறமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது:

29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நேர்முகப் பரீட்சை மீண்டும் ஆரம்பமாகும்.

அலுவலக வேலைகள் காரணமாகவே நேர்முகப் பரீட்சை இரு தினங்கள் ரத்துச் செய்யப்பட்டதாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ)

## ஜீப் விபத்தில் சாரதி பலி

கொழும்பு, ஏப் 26

மகாவலி அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான ஜீப் ஒன்று பொலன்னறுவையில் மின் கம்பத்துடன்மோதியது. ஜீப் சாரதி மரணமானார். 9 பேர் காயமடைந்தனர். செவ்வாயன்று இச்சம்பவம் நடந்தது. [உ-2]

## கங்கை அமரன் குழுவினர் மே 2 ஆம் திகதி கொழும்பில்

### எஸ். பி. பாலசுப்பிரமணியமும் வருவார்

கொழும்பு, ஏப்ரல் 26

தென் இந்திய பின்னணி பாடகர் எஸ். பி. பாலசுப்பிரமணியம், பாடகி சித்ரா ஆகியோர் மேமாதம் 2 ஆம் திகதி கொழும்பில் இசைக் கச்சேரி நடத்துவர்.

இசைஅமைப்பாளர் கங்கை அமரன் இசைக் கச்சேரியை நெறிப்படுத்துவார்;

தென் இந்திய சினிமா நடிகை நிரோஷாவும் இந் நிகழ்ச்சியில் பங்கேற்பார்.

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இந்நிகழ்ச்சி இடம்பெறும்.

ஜனாதிபதியின் தாபரிப்புப் பெற்றோர் திட்டத்துக்கு நிதி திரட்டுவதற்காக இந்த இசைநிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது, (உ-எ)

## புயலுக்கு 24 பேர் பலி

டாக்கா ஏப்ரல் 26

பங்களாதேஷில் நேற்றுவீசிய புயலில் 24 பேர் உயிரிழந்தனர். [ஒ-எ]

**சுபநேரம்**

26 - 4 - 1990

வியாழக்கிழமை சித்திரை 13

சுபநேரம்:

07-29முதல் 08-59 வரை

இராகுகாலம்

01-29 முதல் 2-59வரை

# புராதன நகரத்தின் இடிபாடுகள் முழங்காவில் அருகில் கண்டுபிடிப்பு!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 26

முழங்காவிலில் இருந்து பன்னிரெண்டு மைல் தொலைவில் உள்ள செழியாவில் என்ற காட்டுப்பிரதேசத்தின் நடுவே புராதன நகரம் என்று கருதக்கூடிய பல்வேறு கட்டடத் தொகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தனிக் கருங்கற்களினால் பிரமாண்டமான முறையில் அமைக்கப்பட்ட நான்கு கட்டடத் தொகுதிகளும் சிம்மாசனத்துக்கு உரியதெனக் கருதப்படும் அலங்காரச் சிற்பங்கள் செதுக்கப்பட்ட கருங்கல் பீடமுமே கண்டுபிடிக்கப்பட்டவைகளாகும்.

அந்தக் காட்டுப் பகுதியில் மேலும் மூன்று கட்டடத் தொகுதிகள் இருப்பதாக நம்பப்படுகிறது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை விரிவுரையாளர் திரு. ப. புஸ்பரட்ணம் தலைமையில் நேற்று முன்தினம் சென்ற பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க உத்தியோகத்தர்கள் அடங்கிய குழு ஒன்றே செழியாவில் காட்டுப் பகுதியின் நடுவே புராதன நகரமொன்றின் கட்டட அழிபாடுகளைக் கண்டுபிடித்தது.

கண்டுபிடிக்கப்பட்ட கட்டடத் தொகுதி ஒரு சதுரமைல் சுற்றளவு உள்ள பிரதேசத்தில் அமைந்துள்ளதாகவும் இவற்றைப் புராதன அரசமையமாக கொள்வதற்குரிய வாய்ப்புக்கள் உண்டென்பதனையும் அவதானித்துள்ளனர். இக் கட்டிடப் பகுதியில் உள்ள சிற்பங்கள் 9ஆம் நூற்றாண்டுக்கும் 12ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டதாக இருக்கலாம் என்பதை உறுதி செய்கின்றன என்று திரு. புஸ்ப

(5 ஆம் பக்கம் பார்க்க]

**முச்சந்தி முரளி**




அப்ப... ஆரம்ப ஆட்டத் தோடையே ஆடிப் போயிருப்பினம் எண்டு சொல்லுங்கோ...!

## உள்ளூராட்சித் தேர்தல் நடத்த சபையில் சட்ட மூலம்

கொழும்பு, ஏப் 26

உள்ளூராட்சித் தேர்தல்களை ஒரே நாளில் நாடு முழுவதும் நடாத்துவதற்கு வகை செய்யும் சட்ட மூலம் நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக ஏற்கனவே கட்டுப் பணம் செலுத்தியவர்கள் 12 சதவீத வட்டியுடன் அதனைத் திருப்பிப்பெறுவதற்கும் சட்ட மூலத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தப்பட்ட பின்னர் கடைசிபாக தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது தெரிந்ததே.

## ஷார்ஜா கிரிக்கெட்:

## ஆரம்ப ஆட்டத்திலேயே இந்திய அணி கோட்டை!

### இலங்கை 3 விக்கெட்டினால் வெற்றி

ஷார்ஜா, ஏப்ரல் 26

ஷார்ஜாவில் நேற்று ஆரம்பமான "ஒஸ்ரோலேசியா" கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் ஆரம்ப ஆட்டத்தில் இந்திய அணி இலங்கை அணியிடம் மூன்று விக்கெட்டுகளினால் தோல்வியுற்றது.

இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி வழங்கப்பட்ட 50 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 241 ஓட்டங்களைப் பெற்றது.

அணித் தலைவர் அஸாருதீன் சிறப்பாக ஆடி 108ஓட்டங்களையும் சித்து 64 ஓட்டங்களையும் பெற்றனர்.

ரவி ரட்ணாயக்கா, ருமேஷ் ரட்ணாயக்கா இருவரும் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 4 பந்துகள் மட்டும் மிச்சம் இருக்கையில் 7 விக்கெட்

[5ஆம் பக்கம் பார்க்க )

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### சஞ்சிகை விற்பனைக்கு

க. பொ. த. (உயர்தர) மாணவர்களுக்கான பொருளியலாளன்செப்/டிசம்பர்1989 மார்ச் 1990 விற்பனையாகின்றது. வியாபாரிகளுக்கு விசேட சழிவு வழங்கப்படும். மண்டேலா ரேடர் (புத்தக சாலை) இல. 2 பஸ் நிலையம் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (3235)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் 29-4-90 ஞாயிற்றுக்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (3298)

### வகுப்புக்கள்

Radio TV Deck Air Conditioning Refrigeration வயறிங் வெல்டிங் வைண்டிங் பிளம்பிங் மோட்டார்மெக்கனிஸம் Typing Spoken English புதிய பிரிவுகள் விரைவில் ஆரம்பமாகின்றன. சிறந்த செய்முறை அறிமுறை பயிற்சிகளுடன் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering Aid Hall 328. Navalar Road, Jaffna [12954]

### தேவை

யாழ் நகரில் பிரபல்யமான ஒரு புகைப்பட (Studio) ஸ்தாபனத்துக்கு வேலை பழகும் (Learners) பெண்கள் வயது 18க்கும் 25க்கும் இடையில் மணமாகாதவர் தேவை. விண்ணப்பிக்கவும். உரிமையாளர் 51/1, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (3403)

### மணமக்கள் தேவை

எமது ஸ்தாபனத்தில் சகல சாதி சமயத்திலும் மணமக்கள் உண்டு. உங்கள் தேவை எதுவோ உடன் தொடர்பு கொள்ளுங்கள் எஞ்சினியர், எக்கவுண்டன், டாக்டர் வயது குறைந்த மணமக்கள் தாரம் இழந்தவர்கள் விவாகரத்துச் செய்தவர்களும் செவ்வாய்க்குற்றத்திலும், குற்றமற்றவர்களும் உண்டு. A B C D E விவாகப் பொருத்துனர், 328. நாவலர் றோட், ஆனைப்பந்தி. (12372)

### சித்த மருத்துவ மாணவர் மன்றம்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சித்த மருத்துவ மாணவர் மன்றத்தினர் தவறவிட்ட நன்கொடைப் பற்றுச்சீட்டுப் புத்தகத்தின் இலக்கம் 13 ஆகும்
13-4-1990 உதயனில் வெளிவந்த அறிவித்தலில் 23 என்று அச்சாகியது தவறாகும்

## தஸ்நேவிஸ் கழகம் சாம்பியன்

குருநகர். ஏப் 26

வீரமரணம் எய்திய குருநகர் பகுதி தமிழீழ விடுதலைப் புலிகள் போராளிகளின் வெற்றிக் கிண்ணத்துக்காக நடைபெற்ற மின்னொளிக் கரப்பந்தாட்டப் போட்டிகளில் குருநகர் தஸ்நேவிஸ் விளையாட்டுக்கழக பி அணி சாம்பியனானது.

இறுதியாட்டத்தில் நாவாந்துறை சென் பேரிஸ் சனசமூக நிலைய ஏ அணியை எதிர்த்து விளையாடிய குருநகர் தஸ்நேவிஸ் விளையாட்டுக்கழக பி அணி இரு ஆட்டங்களில் முறையே 15 14, 14-9 என்ற புள்ளிகளைப் பெற்று சாம்பியனாகத் தெரிவானது. (க-51)

### விளையாட்டு விழா

மயிலணி வடக்கு ஜனசக்தி சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தின் 24ஆவது விளையாட்டு விழா இம்மாதம் 28 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறும்.

நிலையத் தலைவர் திரு. வே. தம்பிரத்தினம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் வலி - தெற்கு உதவி அரசாங்க அதிபரும் வலி - தெற்கு பிரதேச சபை விசேஷ ஆணையாளருமான திரு. ஆ. மகாலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (க 7)

# சிற்றூர் அவை தொடர்பாக முழங்காவிலில் நடந்த கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 26

''சாதி மத பிரதேசக் கண்ணோட்டம் கொண்டவர்களும் கிராம முன்னேற்றச் சங்கங்கள் போன்ற பொது நிறுவனங்களில் ஊழல் புரிந்தவர்களும் இந்திய இராணுவத்துடன் விரும்பத்தகாதவாறு ஒன்றிச் செயல்பட்டவர்களும் நாம் அமைக்கும் சிற்றூரவைகளில் அங்கத்துவம் பெற முடியாது ஆயினும் இப்படிப்பட்ட சிலர் இந்த அவைகளில் ஏற்கனவே ஊடுருவி இருப்பதாக எமக்கு தெரிய வந்துள்ளது. உடனடியாக விலகிக்கொள்ளுமாறு இவர்களை நாம் பணித்திருக்கிறோம். அத்துடன் இணக்க சபை, சமாதானசபைபோன்றவற்றில் ஏற்கனவே உறுப்பினராக இருப்போருக்கும் சிற்றூரவைகளில் நியமனம் வழங்கப்படமாட்டாது''.

முழங்காவில்மைதானத்தில் விடுதலைப்புலிகள் நடத்திய சிற்றூரவைக் கூட்டத்தில் இவ்வாறு அவை நியமனம் தொடர்பாக முடிவெடுக்கப் பட்டது. (க-4)

# இன்னமும் முடிவில்லை

கொழும்பு ஏப். 26

அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த விருக்கும் ஈ. பி. ஆர். எல். எவ். குழுவில் யார் யார் இடம் பெறுவார்கள் என்பது இன்னமும் தீர்மானிக்கப் படவில்லை.

இடம் பெறுவோர் பெயர்கள் குறித்து வெளியான தகவல்கள் தவறானவை, ஈ. பி. ஆர். எல். எவ் வின் உயர்மட்டத்தலைவர் ஒருவர் இதனைத் தெரிவித்தார், [உ]

# கொம்பியூட்டர் கல்வி

BASIC
d BASE III +
LOTUS 1, 2, 3
WORD PROCESSING

புதிய வகுப்புகள் 30 — 04 — 90 இல் ஆரம்பமாகின்றன.

★ Lectures by Members of the Institute of data Processing Management (London)
★ Practicals on I. B. M. (Compatibles)
★ Fees May be paid in Installments
★ தமிழிலும் விளக்கங்கள்
★ Valuable Certificate on Completion of Course

JOIN THE LEADERS

For Details
**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**
16, 3rd Cross Street
(O. L. R. தேவாலய மேற்குப் பக்கம்)
யாழ்ப்பாணம்.
[சி-4325]

# 6 ஆம் வருட நினைவஞ்சலி

பிறப்பு:
10 - 01 - 1896

இறப்பு:
26 - 04 - 1984



திருமதி
**செல்வநாதன் ஆசீர்வாதம்மா**
(மாதகல் ஆச்சி)

அன்பின் இறைவா! உன் அருட்பெருங் கொடையால், இவ்வுலக இன்ப, துன்பங்களில் எல்லாம் உமக்கே சான்று பகர்ந்து, அன்பிற்கோர் இருப்பிடமாக, நற்பண்பிற்கோர் உறைவிடமாக, பொறுமைக்கோர் பிறப்பிடமாக வாழ்ந்து உம்மைச் சரணடைந்த திருமதி செல்வநாதன் ஆசீர்வாதம்மாவின் ஆன்மாவுக்கு நித்திய இளைப்பாற்றியை அளித்தருள மன்றாடுகின்றோம்.

இவவின் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், மருமகன், மருமகள்.

எட்வேட் செல்வநாதன்,
''சுவா-ஞானபதி''
உயரப்புலம், ஆனைக்கோட்டை. (3360)

# காணவில்லை



**அமரசிங்கம் குகதாசன்**

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 177/3ஐச் சேர்ந்த அமரசிங்கம் குகதாசன் என்பவர் கடந்த 30-03-90இல் இருந்து காணாமல் போய்விட்டார். பதின்மூன்று வயது நிரம்பிய இச்சிறுவன் காணாமல் போன அன்று பச்சை நிற கோட் சாரமும் வெள்ளைச் சேட்டும் அணிந்திருந்தார். மிக மெல்லிய தோற்றமும் மாநிறமும் உடைய இச் சிறுவனை கண்டவர்கள் மேற்படி விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். கண்டு பிடித்து தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப் படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
அருணா ஜுவலரி
177/3, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
[12373]


# நீங்களும் பஜாஜ் ஒன்றை வாங்கலாம்.




விரும்பிய நேரத்தில் விரும்பிய இடத்திற்கு இலகுவாகப் பயணம் செய்ய நவீன காலத்திற்கு உகந்த வாகனம்......பஜாஜ். நீங்களும் இந்த அற்புதமான பஜாஜ் வாகனம் ஒன்றைச் சொந்தமாக வாங்கி மாதாமாதம் நல்ல இலாபம் சம்பாதிக்க இதுவே சிறந்த வாய்ப்பு.

றிச்சர்ட் பீரிஸ் நிறுவனமும் வங்கிச் சேவையும் இணைந்து வகுத்திருக்கும் சுயதொழில் வாய்ப்பு ஆதாரத் திட்டத்தின் கீழ் பஜாஜ் வாகனம் ஒன்றை வாங்குங்கள். சாரதி அனுமதிப் பத்திரம் கொண்டுள்ள 21 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் பஜாஜ் வாகனத்தின் விலையில் 60 சதவீதம் கடனாக வழங்கப்படும்.

எனவே, குறைந்தபட்சம் உங்களுக்கு ரூ 35,000 செலவிட முடியுமானால் புத்தம் புதிய பஜாஜ் வாகனம் ஒன்றை உரிமையாக்கிக் கொள்ள முடியும். கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு 4 வருடகால அவகாசம் வழங்கப்படும்

பஜாஜ் வாகனம் உங்கள் தொழிலுக்கு மட்டுமல்ல உங்கள் குடும்பத்தினரின் தனிப்பட்ட பயணங்களுக்கும் உகந்தது. சந்தை... பாடசாலை... கோவில்... உறவினர் இல்லம் ... இப்படி எங்கு வேண்டுமானாலும் பஜாஜில் உல்லாசமாகக் சவாரி செய்யலாம்.

இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி பஜாஜ் ஒன்றை வாங்குங்கள். நிச்சயமாக நீங்கள் நன்மையடைவீர்கள்.

**றிச்சர்ட் பீரிஸ் மோட்டோர் கம்பனி லிமிட்டெட்**
60, ஹைட்பார்க் கோர்னர்
கொழும்பு 2
தொலைபேசி: 25701/2, 422149, 549480



இப்பொழுது!
ஒரே தடவையில்
முழுப் பணத்தையும்
செலுத்தி பஜாஜ்
வாகனத்தை
உடனடியாகவே
பெறலாம்.

**பஜாஜ் பயணம் கோடி பெறும்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை

**பொருள்:**

அவள் தன் மென்மை அறியாமல் அனிச்ச மலர்களைக் காம்பு களையாமல் சூடினாள்; அவற்றால் நொந்து வருந்தும் அவளுடைய இடைக்குப் பறைகள் நல்லனவாய் ஒலியா.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288
26 - 04 - 1990 த. பெ இலக்கம் 25

# இழந்த உரிமைகளைப் பெற....

இலங்கைத் தமிழர்கள் தங்களைத் தாங்களே ஆள வேண்டும். சிறிய நாடுகளுக்குச் சுயநிர்ணய உரிமை அவசியம்—

தமிழருக்குத் தனி அரசு வேண்டும். இந்த இலட்சியம் கைகூடுவதற்காக ஐ. நா. சபைக்குக் கூட விண்ணப்பம் செய்ய முடியும். தமிழர்கள் தமது உரிமைகளுக்காக எத்தனை தலைமுறைகள் போராடினாலும் பாதகம் இல்லை.

எங்கள் முன்னோர் தங்களுக்கெனத் தனியாட்சியை வைத்திருந்தனர். இலங்கையின் வரலாற்றில் தமிழர்களுக்கென ஓர் இடம் இருந்திருக்கிறது. எங்கள் இழந்த உரிமையான தமிழ் அரசை மீள அமைக்க வேண்டும் என்பதே எங்கள் நிலைப்பாடாகும்—

உரிமைகள் தாமாக வரமாட்டா. விடுதலை நம்மைத் தேடி வரமாட்டாது. நாம் அதைத்தேடிப் போக வேண்டும். அதற்காகப் பாடுபட வேண்டும்—

சுதந்திரம் வேறொருவர் கொடுக்கப் பெற்றுக்கொள்ளும் பொருளல்ல. மக்களின் வீரத்தாலும், தியாகத்தாலும், விடாமுயற்சியாலும் அவர்கள் அடையும் ஓர் உன்னத நிலைதான் சுதந்திரம்—

பல வருடங்களுக்கு முன், ஆழ்ந்து ஆய்ந்து, வெகு நிதானத்துடனும், தீர்க்க தரிசன நோக்குடனும் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தவர் தந்தை செல்வா அவர்கள். தந்தை செல்வாவின் பதின்மூன்றாவது சிரார்த்த தினம் இன்றாகும். அவரது அன்றைய கருத்துக்கள் அனைத்தும் தமிழர்களுக்கு இன்னும் பொருத்தமாக இருப்பதை எவரும் அவதானிக்கலாம்.

தமிழர்களுக்கு இன்னும் அரசியல் சுதந்திரம் கிடைக்கவில்லை. சுயநிர்ணய உரிமை தானும் சேரவில்லை. இழந்த உரிமையான தமிழ் அரசை இன்னும் மீள அமைக்கவில்லை.

அந்த மூன்றையும் முன்வைத்து, முன்னோக்கிப் போராடி வருகிறார்கள். வீரத்தாலும், விடாமுயற்சியாலும், தியாகத்தாலும் சுதந்திரத்தை, சுய நிர்ணய உரிமையை, தமிழ் அரசை அடைவதற்காகப் போராடி வருகிறார்கள். தந்தை செல்வா கூறிய மூன்று முக்கிய குணாம்சங்களும் ஒன்று சேர்ந்து உருவெடுத்த ஆயிரம் ஆயிரம் தமிழ் இளைஞர்கள் தங்கள் மக்களின் விடிவுக்காகப் போராடினார்கள்: போராடுகிறார்கள்.

அந்தப் போராட்டத்தின் ஒரு கட்டமாக, இளைஞர்களின் விடுதலை இயக்கம் ஒரு புதிய வரலாற்றுத் திருப்பத்தில் நின்று கொண்டிருக்கிறது.

அந்த வரலாற்றுத் திருப்பம், வெற்றியைக் கொடுப்பதற்கு, மக்கள் சக்தி விடுதலை இயக்கத்துக்குப் பின்னால் மலைபோல இருக்கவேண்டும். சுதந்திர இலட்சியத்தால் ஒன்றுபட்டு மக்கள் எழுச்சி கொண்டுவிட்டால் அந்த மக்களை எந்தச் சக்தியாலும் அடக்கி ஒடுக்கிவிடவோ, அழித்துவிடவோ முடியாது என்பது உண்மை.

எனவே எங்கள் இளைஞர்களின் போராட்டத்துக்கு மக்களின் சுதந்திரத்துக்காகப் போராடி வரும் எமது இளைஞர்களுக்கு தமிழர்கள் எல்லோரும் ஒன்றுபட்டு ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

அடிமைத் தளையில் சிக்கியிருக்கும் தமிழர்கள் சுதந்திரம் அடைவதற்கு, தங்கள் இலட்சியத்தில் வெற்றி காண்பதற்கு மக்களின் சுயாதீன வேட்கை அவசியம். அந்த வேட்கையின் ஆரம்பமே எழுச்சி.

சாவுக்கு மத்தியிலும் திருகோணமலை வாழ் தமிழ் மக்கள், உரிமைப் போராட்டத்துக்குத் தமக்குப் புத்துணர்ச்சியைத் தருவதாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. மாத்தயா மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறார்.

திருகோணமலை மக்களுக்கு ஏற்பட்டுள்ள எழுச்சியும், சுதந்திர உணர்வும் சகல தமிழ் மக்களுக்கும் உண்டாக வேண்டும். அப்போதுதான் தமிழினம் தனது இழந்த உரிமைகளை மீட்டுக்கொள்ள முடியும். சுதந்திரத்தை, சுயநிர்ணய உரிமையை, தமிழர் அரசை அடையமுடியும்.

## பிரிட்டிஷ் தூதரக அதிகாரி உதவிகள் வழங்கினார்

யாழ்ப்பாணம் ஏப் 26

பிரிட்டிஷ் தூதரகத்தின் மூன்றாவது செயலாளரான செல்வி. ஜேன் கோர்பீல்ட் யாழ் பல்கலைக் கழகத்துக்கு விஜயம் செய்து படம் காட்டும் திரை மற்றும் படச் சுருள்களைக் கையளித்தார்.

செவ்வாய்க்கிழமை இந்த நிகழ்ச்சி இடம் பெற்றது.

யாழ் சென். ஜோன்ஸ் கல்லூரிக்குச் சென்ற அவர் பெறுமதியான ஆய்வு கூட உபகரணங்களை வழங்கினார்.

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு கிரிக்கெட் விளையாட்டு உபகரணங்களைச் கொடுத்தார்.

இறுதியாக யாழ் சுண்டிக்குழியிலுள்ள ஜெய்ப்பூர் செயற்கை கால் உற்பத்தித் தொழிற்சாலைக்கும் அவர் சென்றார்.

யாழ் விஜயத்தை முடித்துக் கொண்ட அவர், இன்று கொழும்பு பயணமாகிறார். (ஒ-3)

### நினைவில் இன்று

26- 04- 1990

- தந்தை செல்வா நினைவு தினம்
- பேராசிரியர் பெ. சுந்தரம்பிள்ளை நினைவு தினம்
- பண்டிதர் செ. பூபாலபிள்ளை நினைவு தினம்

### அலங்கார திருவிழா

சுழிபுரம் ஏப் 26

தொல்புரம் ஜெகஜோதி அம்பாள் அலங்காரத்திருவிழா இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகி பத்துத் தினங்கள் நடைபெறும்

## பனையால் விழுந்தவர் மரணம்

யாழ்ப்பாணம், ஏப் 26

பனை மரத்தில் இருந்து விழுந்த இளைஞர் உயிரிழந்தார்.

புலோப்பளையைச் சேர்ந்த ஞானசீலன் (வயது 30) என்பவரே உயிரிழந்தவராவார்.

பனையால் விழுந்து படுகாயமடைந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட இந்த இளைஞர் அங்கு நேற்று முன்தினமிரவு மரணமானார். (உ-9)

# திருமலை நூலகக் கட்டடத்தை மீள ஒப்படைக்க கோரிக்கை

திருகோணமலை ஏப் 26

சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் வடக்கு-கிழக்கு மாகாணசபையால் பொறுப்பேற்கப்பட்ட திருகோணமலை நகர சபைக்குச் சொந்தமான பொது நூலகத்தை திருப்பி ஒப்படைக்கும்படி திருகோணமலை நகர சபை பொது நூலகக் குழு வடக்கு கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் திரு. கணேசநாதனிடம் கோரி உள்ளது.

கூட்டங்கள், மற்றும் நிகழ்ச்சிகளை நடத்த மாகாண சபை இந்த நூல் நிலையத்தை பொறுப்பேற்றிருந்தது.

இந்த நூல் நிலையம் மாகாணசபையால் பொறுப்பேற்கப்பட்ட சமயம் நூல் நிலையத்தில் இருந்த நூல்கள் நெல்சன் பட மாளிகைக்கு மாற்றப்பட்டன.

பாதுகாப்பற்ற தகரத்தினாலான இந்த படமாளிகையில் கடந்த ஒன்றரை வருடங்களாக பெறுமதி மிக்க இந்த நூல்கள் விடப்பட்டிருந்தன.

தற்போது வழமை நிலை திரும்பி இருப்பதால் பிரஸ்தாப பட மாளிகையை திருப்பித் தரும்படி அதன் உரிமையாளர்கள் திருப்பி கோரி உள்ளனர். படமாளிகை திருப்பி ஒப்படைக்கப்படும் பட்சத்தில் மாகாண சபையின் பொறுப்பில் இருக்கும் நூல் நிலையத்துக்கு மீண்டும் நூல்களைக் கொண்டு வந்து நூல் நிலையத்தை இயங்க் வைப்பதற்கான முயற்சிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. [இ - உ]

### பேச்சுப் போட்டி

கொழும்புத்துறை ஏப் 26

எதிர்வரும் மே மாதம் 11, 12ஆம் திகதிகளில்நடைபெறவுள்ள உலகத் தமிழர் பண்பாட்டு இயக்க மாநாட்டை முன்னிட்டு இயக்கத்தின் இலங்கைக் கிளை அகில இலங்கை ரீதியில் கட்டுரைப் போட்டி, பேச்சுப்போட்டிகளை நடத்த இருக்கிறது.

இருபாலாருக்குமான இப் போட்டிகள் கீழ், மத்திய, உயர் பிரிவுகளென மூன்று பிரிவுகவில் நடத்தப்படும். (இ-30)

### சுயதொழில்கடன்

வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் ஜனசக்தி உதவி பெறுபவர்களுக்கான சுய தொழில் கடன் வழங்கும் வைபவம் முல்லைத்தீவு இலங்கை வங்கிக் கிளையில் முகாமையாளர் திரு. எஸ். விக்னராசாவால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

4 பேருக்குத் தலா ரூபா 5,000/- வழங்கப்பட்டது. (இ-92)

#### வடக்கு -கிழக்கு பயிலுநர் ஆசிரியர்

## 80 சதவீதமானோருக்கு நியமனம் வழங்கப்பட்டுவிட்டது

கொழும்பு ஏப் 26

வடக்கு-கிழக்கு மாகாணத்துக்குத் தேவையான பயிலுநர் ஆசிரியர்களில் 80 சதவீதமானோருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டன.

கல்விச் சேவைகள் ஆணைக்குழுத் தலைவர் ஜோர்ஜ் மென்டிஸ் இதனை வெளியிட்டார்.

இந்த நியமனங்கள் வழங்கப்படுவதில் இடம் பெற்றதாகக் கூறப்படும். ஒழுங்கீனங்கள் பற்றி விசாரணை நடத்தப் படுகிறது என்றும் திரு.மென்டிஸ் தெரிவித்தார். (இ-எ)

#### ஜனசக்தியின்கீழ்

## உபதபால் அதிபர்களுக்கான பயிற்சித் திட்டம் ஆரம்பம்

முல்லைத்தீவு ஏப் 26

ஜனசக்தி பெறும் குடும்பங்களில் உள்ள படித்த வாலிபர்களுக்கு உப தபால் அதிபர்களுக்கான பயிற்சித் திட்டத்தை முல்லை உதவி அரசாங்க அதிபரும், உதவி ஆணையாளருமான திரு. வே. கந்தசாமி ஆரம்பித்துள்ளார்.

இப் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் ஜனசக்திக் குழுக்களுக்கு ஊடாக கிராம சேவை உத்தியோகஸ்தர்களிடம் ஒரு கிழமைக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என அறிவிக்கப் படுகிறது.

இத் திட்டத்தினால் தபாற் கந்தோரில் உள்ள ஊழியர் தட்டுப்பாடு நீங்கும் என உதவி அரசாங்க அதிபர் கூறினார். (இ-92)

## புலமைப் பரிசில்கள் மூலம் ஏழை மாணவர் கல்வி உயரும்

குருநகர் ஏப் 26

''இந்நன்கொடை மூலம் சமாசம் வருடா வருடம் திறமையும் ஆர்வமும் கொண்ட வறிய மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்க முடியும். அமரர் வேலுப்பிள்ளை போன்று ஏனைய வசதிபடைத்தோரும் இத்தகைய திட்டங்களை எம்மத்தியில் வளர்த்தால் ஏழை மாணவர்களது கல்வியை மேம்படுத்தலாம்.''

மறைந்த வேலுப்பிள்ளை ஞாபகார்த்த கல்விநிதி வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு பேசிய கொழும்பு தேசிய வீடமைப்பு அதிகார சபை சிரேஷ்ட முகாமையாளர் திரு. ஆர். எம் நாகலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

சுடரொலி சனசமூக நிலையத் தலைவர் திரு. அ. ஞானபிரகாசடாஸ் தலைமை வகித்த இவ்வைபவத்தில் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாச கல்வி நிதிக்கு யாழ். நாச்சிமார் கோவிலடி சுடரொளி சனசமூக முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 15 ஆயிரம் ரூபாவை மறைந்த வேலுப்பிள்ளையின் புதல்வர் ஈஸ்வரன் கையளித்தார். (ப-51)

## முல்லைத்தீவு கடற்றொழிலுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி

முல்லைத்தீவு ஏப். 26

ஆசிய அபிவிருத்தி வங்கி முல்லைத்தீவு கடற்றொழில் விரிவாக்கத்துக்கென 10 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது.

முல்லைத்தீவு கச்சேரி மண்டபத்தில் புனர் வாழ்வு புனர் நிர்மாணத்திட்டமிடல் அமைச்சின் கண்காணிப்புக் குழு அண்மையில் நடத்திய கூட்டத்தில் அமைச்சின் இணைப்பு அதிகாரி திரு. இ. அருமைநாயகம் இத்தகவலை வெளியிட்டார்.

முல்லை உதவி அரச அதிபரும் உதவி ஆணையாளருமான திரு. வே. கந்தசாமி தலைமை வகித்தார். (ப - 92)

## மாடுகளுக்கு கோமாரி தடுப்பு

சுழிபுரம் ஏப். 26

சுழிபுரம், தொல்புரம், பண்ணாகம், மூளாய் ஆகிய கிராமங்களிலுள்ள கால் நடைகளுக்கு விசேஷமாக பசு மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பு மருந்து ஏற்றப்பட்டது.

வழக்கம்பரை அம்மன் கோவிலடியில் 250 மாடுகளுக்கும் பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவிலடியில் 200 மாடுகளுக்கும் சென்ற வெள்ளிக்கிழமை ஊசி மருந்து ஏற்றப்பட்டது.

கால் நடை வளர்ப்போர் சங்கப் பிரதிநிதிகளும் அரச மிருக வைத்திய பகுதியினரும் சேர்ந்து இப் பணியில் ஈடுபட்டிருந்தனர். (இ - 78)

## உறவினர் மீதே அதிக தர்மம் செய்யுங்கள்




''ஏழைகளின் மீது தான தர்மம் செய்வது, ஸதகா [தான தர்மம்] மட்டுமேயாகும். உறவினர்களின் மீது தானதர்மம் செய்வதில், ஒரு ஸதகா, மற்றொன்று உறவினர்களை ஆதரித்தல் ஆகிய இரு அம்சங்கள் அமைந்திருக்கின்றன'' என கூறினார்கள்.

(அஹ்மத்)

''நீ, ஒரு பொற்காசை அல்லாஹ்வின் வழியில் செலவழித்தாய்; அடிமையை உரிமை விடுவதில் செலவு செய்தாய்; ஏழைக்குத் தர்மம் செய்தாய்; மனைவி, மக்கள் மீது செலவு செய்தாய்! இவற்றில் நீ, மனைவி மக்களின் மீது செலவு செய்த ஒரு பொற்காசே மிக்க மேலானதாகும்'' இவ்வாறு நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஹஜ்ரத் மைமூனா (ரலி) அவர்கள், ஒரு முறை ஓர் அடிமையை விடுதலை செய்தார்கள். ''அதை உனது மாமன்மார்களுக்குக் கொடுத்திருந்தால், அதிக நன்மைக்குரியதாக அமைந்திருக்கும்'' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகர் திருமுகம்

## பாலைவனத்தில் ஒரு பசுந்தரை

''பொதுமக்கள் அன்பாக நடத்தப்பட வேண்டும்'' என்று யாழ் அரச அதிபர் அரசாங்க அதிகாரிகளுக்குப் பணித்துள்ளார்.

யாழ் அரச அதிபரது இப் பணிப்புரை உண்மையிலேயே மெச்சத்தக்கதொன்றாகும் வசதிபடைத்த பணக்காரர்களுக்கே எங்கும் எதிலும் முதலிடம். வைத்திய சாலையில் சிகிச்சை பெறுவதாகவிருக்கலாம். வேலைவாய்ப்டாகஇருக்கலாம் ஏன் ரயிலில் ஆசனப்பதிவு செய்வதாகத் தானும் இருக்கட்டுமே. எதிலும் இதுதான் நிலைமை.

இப்படி இருக்கையில் அரச அதிபரின் இக் கூற்று பாலைவனத்தில் ஒரு பசுந்தரை போல் அமைந்துள்ளது.

எமது சேவாச்சிரமத்துக்கு வருகை தந்த ஒரு டாக்டர் ஒரே நாளில் 98 நோயாளர்களைப் பார்வையிட்டார் இவர் ஒரு பிரத்தியேக வைத்தியசாலையில் 4 அல்லது 5 நோயாளிகளை மாத்திரம் பார்ப்பார்.

இவர் எனக்கு சொன்னது ''என்னால் முடிந்த சேவை ஆற்றவே இங்கு வந்தேன்.'' அத்துடன் நானறிய அவர் பலமுறை கால்நடையாகவே சென்று சேவைசெய்துள்ளார்.

இவரது முன்மாதிரி சேவையின் தரத்தை பன்மடங்கு உயர்த்துகிறது அல்லவா?

சுவாமி சித்ரூபானந்தா,
ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரமம்,
பருத்தித்துறை.



அன்னை பூபதி நினைவாக வவுனியாவில் இடம்பெற்ற எழுச்சி விழாவின்போது எடுக்கப்பட்ட படங்கள்.
ஊர்வலத்தில் கலந்து கொண்ட அலங்கார ஊர்திகளில் ஒரு பகுதியையும் வவுனியா மாவட்டத்தில் உயிர்நீத்த வேங்கைகளின் அன்னையர், விடுதலைப்புலிகளின் மகளிர் அணியைச் சேர்ந்த வவுனியா அமைப்பாளர் செல்வி ரதி, வன்னிப் பிராந்திய அரசியல் பொறுப்பாளர் சந்திரன். வவுனியா மாவட்ட இராணுவப் பொறுப்பாளர் தயாபரன் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (இ-164)
(படங்கள் வவுனியாச் செய்தியாளர்)

## ★ செய்திக் கொத்து ★

### ''இன்ரர் போன்''

கிளிநொச்சி, ஏப் 26

கிளிநொச்சிக் கச்சேரி தனது நிர்வாகப்பணிகளை இலகுவாகக் கையாளும் நோக்கில் 'இன்ரர் போன்' தொடர்பு வசதியைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை இப்பகுதி அரச அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் மேற்கொண்டுள்ளார். (ப-76)

### நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப் 26

ஆத்மஜோதி தத்துவஞான நூலாசிரியர் திரு. த. சத்தியதாஸன் எழுதிய பிரமோதூத வருஷ பலன்களும் ஸ்ரீ ரமணபகவான் அருளிய தத்துவஞான விளக்கமும் அடங்கிய நூல் வெளியீட்டு விழா அண்மையில் கீரிமலை யோகர் சுவாமி மகளிர் தவ நிலையத்தில் முன்னாள் மெய்கண்டான் மகாவித்தியாலய அதிபர் திரு. வ. செல்லையா தலைமையில் நடைபெற்றது. (ப-7)

### சமய நாடகம்

குருநகர், ஏப் 26

யாழ் திருமறைக் கலாமன்றம் தயாரித்து அளிக்கும் 'களங்கம்' முழு நீள கத்தோலிக்க சமய நாடகம் நாளை 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு கலாமன்றக் கலை அரங்கில் மேடை ஏற்றப்படவுள்ளது.

யாழ் பிரதான வீதி திருமறைக் கலாமன்றக் கலை அரங்கில் இலவசமாக மேடை ஏறும் 'களங்கம்' நாடகத்தில் குடாநாட்டின் சகல பகுதிகளையும் சேர்ந்த திறமை வாய்ந்த கலைஞர்கள் நடிக்கின்றனர். [க-51]

### சுடலை பராமரிப்பு

கொழும்புத்துறை, ஏப் 26

வலிகாமம் வடக்குப் பிரதேச சபைப் பகுதியில் உள்ள சகல மயானங்களையும் சேமக்காலைகளையும் உடனடியாக புனரமைத்து நல்ல நிலையில் வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வலிவடக்கு உதவி அரச அதிபரும் பிரதேச சபை விசேட ஆணையாளருமான திரு. கா. இராசையா உத்தரவிட்டுள்ளார். (இ-30)

### ஆசிரியர் இல்லை

முல்லைத்தீவு ஏப் 26

முல்லைத்தீவு முஸ்லிம் கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் தமிழ் மாணாக்கருக்கு சைவசமய பாடம் கற்பிக்க ஆசிரியர் இல்லை.

இங்கு கடமையாற்றிய தமிழ் ஆசிரியர்கள் யாவரும் வேறு தமிழ்ப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (ப-92)

### நீர் விநியோகம்

கொழும்புத்துறை ஏப் 26

கொழும்புத்துறை கிழக்கு மக்களுக்கு குழாய் மூலம் நீர் வழங்கும் திட்டம் யுனிசெவ் தாபன உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (இ-30)

## நாணய மாற்று விகிதம்

24-04-1990

இலங்கை மத்திய வங்கிக்கும் வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்றுவிகிதம்:-

| | | வாங்குதல் | விற்றல் |
|---|---|---|---|
| 100 | இந்திய ரூபா | 230.64 | 231.61 |
| 100 | அமெரிக்க டொலர் | 3997.15 | 4002 80 |
| 100 | ஸ்ரேர்லிங் பவுண்ட் | 6516.78 | 6547.75 |
| 100 | ஜேர்மன் மார்க் | 2342.98 | 2359.00 |
| 100 | பிரெஞ்சு பிராங்க் | 694.14 | 707 19 |
| 100 | ஜப்பானிய யென் | 25.2172 | 25.4361 |

## பிறந்த தினவாழ்த்து



★ பிரதாப் - பிரசாந் ★

சிறுப்பிட்டி மேற்கு இராச வீதி நீர்வேலியைச் சேர்ந்த கணேசலிங்கம் - சந்திரவதனி தம்பதிகளின் செல்வப் புதல்வர்கள் பிரதாப் - பிரசாந் இருவரும் தங்கள் முதலாவது பிறந்த தினத்தை இன்று (26-04-90) வியாழக்கிழமை கொண்டாடுகிறார்கள்.

அவர்களை அம்மா, அப்பா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், அத்தைமார், மற்றும் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் சகல செல்வங்களும் பெற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

[12371]

# சோவியத் இராணுவம், கடற்படை லித்துஏனியாவைச் சுற்றிவளைப்பு!

## மாஸ்கோ மீது பொருளாதாரத்தடை விதிக்க அமெரிக்க அதிபர் மறுப்பு!

மாஸ்கோ ஏப் 25

சுதந்திரப் பிரகடனம் செய்துள்ள லித்துஏனியாவின் எல்லை முழுவதும் சோவியத் இராணுவத் துருப்புகள் நிறுத்தப்பட்டுள்ளன.

பால்டிக் குடியரசுகளில் ஒன்றான லித்துஏனியாவின் கடல் எல்லையிலும் சோவியத் கடற்படை கப்பல்கள் உஷார் நிலையில் வைக்கப்பட்டு உள்ளன.

சோவியத் யூனியனின் பொருளாதார முற்றுகைக்கு உள்ளான லித்துஏனியாவுக்கு வெளிநாடுகள் உதவிகளை அனுப்பும் வாய்ப்புக்கள் உருவாகி வருவதாகக் கூறப்படும் வேளையில், இந்த நடவடிக்கையை சோவியத் அரசு எடுத்து இருப்பது அப்பகுதியில் பதற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

சுதந்திரப் பிரகடனத்தை ரத்துச் செய்யக் கோரி சோவியத் அரசு இந்த நிர்ப்பந்தங்களை லித்துஏனியா மீது விதித்து வருகிறது.

லித்துஏனியா மீது பொருளாதார முற்றுகை விதிக்கப்பட்டதற்கு பதில் நடவடிக்கையாக மாஸ்கோ மீது பொருளாதார முற்றுகை விதிக்கப்பட வேண்டும் என்று லித்துஏனியாவின் கோரிக்கையை ஏற்க அமெரிக்க ஜனாதிபதி புஷ் மறுத்து விட்டார்.

லித்துஏனியா விஷயத்தில் சோவியத் அரசு மீது நடவடிக்கை எடுப்பது பற்றி அமெரிக்காவின் அரசியல் கட்சிகளிடையே கருத்து உடன்பாடு முதலில் ஏற்பட வேண்டும் என்றும் அதிபர் புஷ் தெரிவித்தார்.

அமெரிக்கா, சோவியத் அரசு மீது கடும் நடவடிக்கை எடுக்காமல் இருக்கும் செயலை லித்துஏனியா ஜனாதிபதி லான்ட்பேர்கீஸ் வன்மையாகக் கண்டித்துள்ளார். (எ)

## கம்யூனிஸத்தின் வீழ்ச்சி பற்றி பாப்பாண்டவர் கருத்து!

பிராக் ஏப் 25

கிழக்கு ஐரோப்பாவில் கம்யூனிஸம் வீழ்ச்சி அடைந்தது குறித்து பரிசுத்த பாப்பரசர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

ஐக்கிய கிறிஸ்தவ ஐரோப்பாவைக் கட்டி எழுப்பும் காலம் வந்துள்ளது என்றும் பாப்பரசர் சொன்னார்.

அச்சத்தின் அடிப்படையிலேயே கம்யூனிஸம் கட்டி எழுப்பப்பட்டது. கடவுள் இருப்பதை கம்யூனிஸம் மறுத்தது. அதனால் தான் இன்று கம்யூனிஸம் வீழ்ச்சி அடைந்தது என்றும் பாப்பரசர் செச்கோஸ்லேவியாவுக்கு விஜயம் செய்த போது, அங்கு தெரிவித்தார்.

ஐக்கிய ஐரோப்பா இனி ஒரு கனவாக இருக்காது. கனவாக இருந்ததை நனவாக்கும் தூரத்தில் நாம் இருக்கின்றோம்— இப்படி பரிசுத்த பாப்பரசர் மேலும் சொன்னார். (எ)

## 14 லட்சம் பேர் பாதிப்பு

புதுடில்லி, ஏப் 25

இந்தியா முழுவதிலும் 1989 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஆய்வின்படி பால்வினை நோய்களால் பாதிக்கப்பட்ட 13 லட்சத்து 63 ஆயிரம் நோயாளர் உள்ளனர்.

இவர்களில் தமிழ்நாட்டில் மட்டும் 2 லட்சத்து 29 ஆயிரம் நோயாளர் உள்ளனர்.

மறாட்டிய மாநிலத்தில் 4 லட்சத்து 26 ஆயிரம் பேர் பால்வினை நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். (எ)

## சோவியத்-சீன உடன்பாடு

மாஸ்கோ, ஏப்ரல் 25

நான்காயிரம் மைல் நீள எல்லையில் நிலை கொண்டிருக்கும் துருப்புக்களை குறைப்பது சம்பந்தமாக சோவியத் சீனப் பிரதமர்கள் உடன்பாடு கண்டுள்ளனர்.

சீனப்பிரதமர் லீ-பெங்மாஸ்கோவில் இதுசம்பந்தமான பேச்சுக்களை சோவியத் பிரதமர் றிஷ்கோஷடன் நடத்தினார். (எ)

## மரண தண்டனை

கார்ட்டூம், ஏப்ரல் 25

சூடானில் சதிப்புரட்சி முயற்சியில் ஈடுபட்ட 27 இராணுவ அதிகாரிகளுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டு, அது உடனடியாக நிறைவேற்றப்பட்டது.

மரணதண்டனைக் குள்ளானவர்களில் இரண்டு மேஜர் ஜெனரல்கள் நான்கு கேர்னல்கள் ஆகியோரும் அடங்குவர். (எ)

## மங்கோலியாவில் ஆர்ப்பாட்டம்

உலான்பற்றார், ஏப்ரல்25

வட மங்கோலியாவில் புதிய தேர்தல் சட்டத்தை எதிர்த்து சுமார் 2 ஆயிரம் பேர் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஆளும் கம்யூனிஸ்ட்கட்சிக்கு ஆதரவாக புதிய சட்டம் அமைந்திருக்கிறது என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர். (எ)

## பிரபல இசைக்கலைஞர்

லொஸ்ஏஞ்சல்ஸ், ஏப்ரல்25

ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் அவமானப்படுத்தப்பட்ட அழகுராணி இன்று கோடிக் கணக்கில் வருமானம் பெறும் பாடகியாக மாறி விட்டார்.

அவர் பெயர் வனேஸா வில்லியம்ஸ்.

ஆறு வருடங்களுக்கு முன் இவர் அமெரிக்காவின் அழகுராணியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

ஒரு சஞ்சிகையில் இவரது நிர்வாணப்படம் வெளியான செய்தி நிரூபிக்கப்பட்டதைத் தொடர்ந்து அழகுராணிப் பட்டம் இவரிடமிருந்து பறிக்கப்பட்டது.

அதன் பின்னர் வனேசா வில்லியன்ஸ் இசைத்துறையில் இறங்கினார்.

இன்று இசை, நடனத்தில் முன்னணியில் உலகில் திகழும் வனேஸா—

"அவமானப்படுத்தப்பட்டதற்கு சரியான பழி வாங்கலாக இசையில் நான் அடைந்த வெற்றிஅமைந்துள்ளது" —என்று சொன்னார். (எ)

## 3ஆவது பிறந்ததின ★ வாழ்த்து ★



★ செல்வி கார்த்திகா ★

உடுவிலைச் சேர்ந்த செல்வறஞ்சன் - ஜீவகலா தம்பதிகளின் செல்வப் புதல்வி கார்த்திகா தனது 3ஆவது பிறந்த தினத்தை (26 - 04 - 1990) இன்று மிகவும் சிறப்பாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா (சுவிஸ்), அம்மா, தங்கை, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியசித்தப்பா, (சுவிஸ்), சின்னசித்தப்பா (சவுதி), பெரியமாமி, சின்னமாமி, பெரியமாமா, சின்னமாமா, அத்தை ஆசைமாமா, வசந்தன் மாமா, சுவிஸ் சின்ன மாமா, மாமி, காந்தன் மாமா (ஜேர்மன்), ரஜனிச் சித்தி, மதனிச் சித்தி, ரகுமாமா (சவுதி), அத்தை, தீபா மாமி, தம்பிச் சித்தப்பா மற்றும் பாட்டிமார், தாத்தாமார், மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், மச்சான்மார், மச்சாள்மார், துர்க்கா தேவியின் அருள்பெற்று வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

உடுவில்,
சுன்னாகம். (3349)

## தேவை

பாதுகாப்பு உத்தியோகத்தர்
[ SECURITY OFFICER ]
( 8 மணித்தியால வேலை )

கல்வி, நற்சாட்சிப் பத்திர மூலப் பிரதிகளுடன் 28-04-1990 க்கு முன் நேரில் விண்ணப்பிக்கவும்.

நிர்வாக உத்தியோகத்தர்,
அருண் மாக்கட்டிங் அன்ட், அட்வட்டைசிங்,
15, 2வது ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(C/4472)

## முதலாவது ★ பிறந்த தினவாழ்த்து ★



செல்வி
### திவ்வியா திவ்வியானந்தன்

திவ்வியானந்தன் சாருலதா தம்பதிகளின் செல்வப் புதல்வி திவ்வியா தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று 26-04-90 மயிலிட்டியில் தனது இல்லத்தில் அப்பா, அம்மா, அப்பப்பா, மாமிமாருடன் குதூகலமாய் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பப்பா, கொழும்பில் இருக்கும் பெரிய மாமா பெரிய மாமி குடும்பத்தினர், லண்டனில் இருக்கும் சின்னமாமா சின்ன மாமி குடும்பத்தினர், நெதர்லாந்தில் இருக்கும் சித்தப்பா சின்னம்மா குடும்பத்தினர், ரமேஸ் சித்தப்பா, ரமணன் சித்தப்பா, ரஞ்சித் சித்தப்பா, ரேணுகா மாமி, ரஜி மாமி மற்றும் அம்மம்மா, சோபிதா சின்னம்மா, நிசா மாமா, கம்சா சின்னம்மா, பிரியா, கௌதமி, மிகிரா, டிலக்சினி ஆகியோர் பல்கலையும் கற்று அன்பும் பண்பும் பெருகி பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

[3355]

## 2ஆவது பிறந்ததின ★ வாழ்த்து ★



### செல்வன் ஸ்ரீ ரஜிதன்

துன்னாலை தெற்கைச்சேர்ந்த ரவிந்திரன்-அமுதா தம்பதிகளின் செல்வப் புதல்வன் ஸ்ரீ ரஜிதன் (26 - 04 - 1990) இன்று தனது இரண்டாவது பிறந்த தினத்தை வெகு விமரிசையாக தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அவுஸ்திரேலியாவிலிருக்கும் பெரியப்பா, பெரியம்மா, கீதா அக்கா, குமரன் அண்ணா, பவி அக்கா, லண்டனில் இருக்கும் அண்ணா, பிரான்சில் இருக்கும் சின்னமாமா குடும்பத்தினர், நல்லூர் ஆசைமாமா குடும்பத்தினர், மாலைதீவு சித்தப்பா, ஜேர்மனி பெரியப்பா குடும்பத்தினர், திருநெல்வேலி மாமா, மாமி, அப்பப்பா, அப்பம்மா, நளா அன்ரி அனைவரும் அளவெட்டி ஸ்ரீ நாகவரத நாராயணன் அருளால் பல்கலையும் பெற்று, பல்லாண்டுகாலம் நீடுழி வாழ்க என வாழ்த்துகின்றார்கள். (3356)


## விக்னா ரியூசன் சென்ரர்

52, Stanley Road, Jaffna.

கலை வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்

கலை, வர்த்தக

A/L

91 DAY CLASSES

தினசரி 8.00 — 2:00

ஆரம்பம்: 03 - 05 - 1990 காலை 8.00

முக்கிய குறிப்பு:
i முழு பாடத்திட்டமும் செய்து கொடுக்கப்படும்.
ii எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படும்.
iii 30 ஆம் திகதிக்கு முன் அனுமதி களைப் பெற்றுக் கொள்ளவும்.
vi பயிற்சிப் பரீட்சைகள் நடாத்தப்படும்.
v விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்படும்.
vi முற்றிலும் பாடசாலை போன்று நடாத்தப்படும்.

கலை வர்த்தக வகுப்புகளுக்கான
92 A/L அனுமதிகளை முன்கூட்டியே அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும். வகுப்புக்கள் வெகுவிரைவில் ஆரம்பமாகவுள்ளது.

(சி-4465)



## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி — யாழ்ப்பாணம்.

Spoken English With Grammar
By BRITTO

புதிய பிரிவு ஆரம்பம்: 28 - 04 - 1990
(9 மணி) — (1 மணி)

(சி-4319)


## அரசாங்க மரக்கூட்டுத்தாபனம் பகிரங்க ஏலவிற்பனை

எமது யாழ்ப்பாணம் மரக்காலையில் உள்ள (22) மலைவேம்பு குற்றி மரங்கள் (Mahogany Logs) — 126.0 கனஅடி 1990 - 04 - 28ஆந் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் என்னால் விற்பனை செய்யப்படும்

ஏலத்தில் வாங்க விரும்புவோர் ஏலத்தில் விடப்படும் மரங்களை முன்கூட்டியே பார்வையிடலாம்.

மேலதிக விபரங்களுக்கு யாழ்ப்பாணம் மரக்காலைப் பொறுப்பதிகாரியுடனோ அல்லது எம்முடனோ தொடர்பு கொள்ளவும்.

பிரதேச முகாமையாளர்
வட பிராந்தியம்

அரசாங்க மரக்கூட்டுத் தாபனம்,
25, கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-4318]


## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி - யாழ்ப்பாணம்.

A/L 91

இந்துசமயம் - அருள்நங்கை

ஆரம்பம்: 28 - 04 - 1990 12 மணி

(சி-4323)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## 2ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



**திரு. கந்தையா சற்குணசிங்கம்**

தோற்றம்: 17 - 07 - 1955    மறைவு: 26 - 04 - 1988

இவரின் பிரிவால் வாடும்:
தாய், மனைவி, மக்கள்,
சகோதரர்கள், மருமக்கள், மற்றும்உறவினர்கள்.

மல்லாவி,
யோகபுரம்.    (12368)

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர் உயர் திரு
**சோமசுந்தரம் சுப்பிரமணியம்**
இளைப்பாறிய அதிபர்

தோற்றம்: 18-01-1920    மறைவு: 27-03-1990

01-04-1990 இல் நடைபெற்ற அன்னாரின் ஈமக் கிரியையிலும் 24-04-1990 இல் கீரிமலையில் நடைபெற்ற அந்தியேட்டியிலும் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் அதே வேளையில் 26-04-1990 இல் எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் வீட்டுக் கிருத்தியத்தில் பங்குகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
திருமதி சுப்பிரமணியம்
குடும்பத்தினர்.

6 ம் வட்டாரம்,
புங்குடுதீவு.    (3359)

## 21ஆம்நாள் நினைவுஅஞ்சலியும் வீட்டுக் கிருத்திகையும்



**திருமதி நவாரணி கணேசராசா**
(பொன்னுமணி)

தோற்றம்: 1959-10-21    மறைவு: 1990-04-06

26.4 1990 அன்று வீட்டில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்தில் பங்கு பற்றும்படி உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டிக் கொள்கிறோம்.

அன்னாரின் பிரிவால் தயருறும்,
கணவன், பிள்ளைகள்.

6/1, தலையாழி லேன்,
பிரம்படி,
கொக்குவில்.    (12375)

# சந்தை விலைகள்

சுன்னாகம், யாழ்ப்பாணம், திருநெல்வேலி சந்தைகளில் நேற்றைய மரக்கறி விலைகள் — கிலோ அடிப்படையில்;

| | சுன்னாகம்: | திருநெல்வேலி | யாழ்ப்பாணம்: |
|---|---|---|---|
| கத்தரி | ரூ. 10.00-12.00 | ரூ. 9.00-12.00 | ரூ. 14.00-16.00 |
| வாழைக்காய் | ரூ. 4.00- 5.00 | ரூ. 3.00- 4.50 | ரூ. 14.00-16.00 |
| பயிற்றங்காய் | ரூ. 8.00-10.00 | ரூ. 7.00-11.00 | ரூ. 12.00-14.00 |
| பாகற்காய் | ரூ. 9.00-10 00 | ரூ. 8.00-11 00 | ரூ. 14.00-16.00 |
| கோவா | ரூ. 10.00-12.00 | ரூ. 10.00-13 00 | ரூ. 12 00-14.00 |
| லீக்ஸ் | ரூ. 22.00-23.00 | ரூ. 20.00-22.00 | ரூ. 24.00-28.00 |
| கரட் (மலைநாடு) | ரூ. 18.00-20.00 | ரூ. 20.00-22.00 | ரூ. 20.00-24.00 |
| பீற்றூட் | ரூ. 8 00-10.00 | ரூ. 7.00-10.00 | ரூ. 14.00-16.00 |
| பீன்ஸ் | ரூ. 18.00-20.00 | ரூ. 20.00-22.00 | ரூ. 18.00-20.00 |
| பூசணி | ரூ. 4.50- 5.50 | ரூ. 2.00- 3.50 | ரூ. 6.00- 8.00 |
| பச்சைமிளகாய் | ரூ. 12.00-14.00 | ரூ. 9.00-12.00 | ரூ. 20.00-25.00 |
| வெங்காயம் | ரூ. 18.00-21.00 | ரூ. 16.00-20.00 | ரூ. 22.00-26.00 |
| உருளைக்கிழங்கு | ரூ. 28.00-30 00 | ரூ. 27 00-29 00 | ரூ. 28 00-30 00 |
| மரவள்ளிக்கிழங்கு | ரூ. 6 50- 7.50 | ரூ. 6.00- 8.00 | ரூ. 6.00- 8.00 |
| வெண்டைக்காய் | ரூ. 12 50-13.50 | ரூ. 7.00-10 00 | ரூ. 12 00-14 00 |
| செத்தல்மிளகாய் | ரூ. 60.00-61.00 | ரூ. 57.00-60.00 | ரூ. 60.00-63.00 |

## ஐ. தே. க- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி ஆர். பிரேமதாச தெரிவித்திருக்கிறார்.

ஆளுங் கட்சியின் மேதினக் கூட்டத்தில் தொழிலாளர்களுக்கு செய்யப்பட வேண்டிய வசதிகள் சம்பந்தமாக கருத்துக்கள் முன் வைக்கப்பட வேண்டும் எனவும் அவர் கேட்டிருக்கிறார்.

பிரஸ்தாப மேதின விழாவில் தொழிலாளர்களுக்கு வழங்கப்படவிருக்கும் புதிய சலுகைகள் மற்றும் நிவாரணங்கள் பற்றி ஜனாதிபதி அறிவிப்பார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## மே தினத்தில்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளன.

நெல்லியடி, தெல்லிப்பழை, கைதடி, வேலணை ஆகிய பகுதிகளில் இருந்து எழுச்சி ஊர்வலங்கள் யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படும்.

கடந்த கால நிகழ்வுகளை பிரதிபலிக்கும் ஊர்திகளும் ஊர்வலத்தில் இடம்பெறும். இவை அனைத்தும் யாழ். ஆஸ்பத்திரி வீதி, மணிக்கூண்டு வீதி வழியாக பிற்பகல் 4 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியை அடையும்.

இதற்கு ஏற்ற விதத்தில் அந்தந்த பகுதிகளிலிருந்து ஊர்திகள் மற்றும் ஊர்வலங்கள் புறப்படும்.

பின்னர் மத்திய கல்லூரி மைதானத்திலிருந்து ஊர்வலம் யாழ். முற்றவெளியை வந்தடையும். அங்கு மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெறும்.

யாழ். மாவட்ட விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர் பானு உட்பட மக்கள் முன்னணி பிரமுகர்கள் பலர் கூட்டத்தில் கலந்துகொள்ள உள்ளனர். (இ-9)

## புலிகள்- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யிருக்கிறது. இது தொடர்பாக அரசு நிலைமையைத் தெளிவுபடுத்தி அறிக்கை வெளியிடுமா?

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பிளவு ஏற்படுத்த நாம் முயற்சிப்பதாக அரசு எங்கள் மீது குற்றம் சுமத்துகிறது. ஆனால் அவர்களுக்கிடையில் பிளவை ஏற்படுத்தும் செயல்களில் விடுதலைப் புலிகள்தான் ஈடுபட்டு வருகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளினால் நாடு ஆபத்தில் சிக்கியிருக்கிறது. மக்கள் அச்சத்துடனும்கோபாவேஷத்துடனும்இருக்கிறார்கள்.

அண்மையில் நல்லூர் கந்தசுவாமி கோவிலில் கூட்டத்தில் பேசிய விடுதலைப் புலிகளின் பிரமுகர் டாக்டர் பாலசிங்கம், ஆயுதங்களைக் கீழே வைக்க மாட்டோம் என்றும்-

இலங்கை அரசு தகுந்த நடவடிக்கை எடுக்காவிட்டால் ஆயுதப் போராட்டம் தொடரும் என்றும் கூறியிருக்கிறார்.

இந்த நிலையில் அரசு - விடுதலைப்புலிகள்இடையே நடக்கும் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக அரசின் நிலைப்பாடு என்ன என்பது குறித்து ஓர் அறிக்கையை அரசு சபையில் சமர்ப்பிக்குமா?

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் குறித்து பத்திரிகைகளில் வரும் செய்திகள் யாவும் தவறானவையா? அவை குறித்து அரசு என்ன நடவடிக்கை [illegible] என்று கேட்டார். (உ-2)

## ஆயுதங்களைக்- -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைத்து விடுவோம்.

**பத்திரிகைகளிடமே கேளுங்கள்**

புலிகள் பற்றி பத்திரிகைகளில் வரும் அநாவசியமான செய்திகளுக்கு நான் பதிலளிக்கத் தேவையில்லை. அவற்றுக்கான பதிலை அந்தப் பத்திரிகைக்காரர்களிடமே கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்.

12 வருடங்களாக ஆயுதங்களுடன் வாழ்ந்த விடுதலைப் புலிகள் இப்போது ஜனநாயக வழிமுறைக்கு வருகின்றபோதிலும், பெரும்பான்மையினர் பற்றி அவர்களுக்கு சந்தேகம் இருக்கவே செய்கிறது.

அவர்களுடன் ஜனாதிபதி மனம் திறந்துதான் பேசுகிறார். அவர்களை வழிக்குக் கொண்டுவர சில காலம் செல்லலாம்.

**உங்களுடன் போட்டியிடமாட்டார்கள்**

(எதிர்க்கட்சியினரைப் பார்த்து) பயப்படாதீர்கள். அவர்கள்இரத்மலானையிலோ கல்கிசைப் பகுதியிலோ நிச்சயமாகப் போட்டியிடப்போவதில்லை.

(சபையில் கூச்சல்)

எதிர்க்கட்சியில் ஒருவர்:- அவர்கள் இல்லாவிட்டால் வாழைத்தோட்ட குண்டர்கள் இருக்கிறார்களே. அவர்கள் எங்கே?

ரஞ்சன்:- ஏன் பொரளையில் இருந்த குண்டர்கள் கூட இப்போது இல்லை. எல்லோரும் அடக்கப்பட்டுவிட்டார்கள்.

விடுதலைப் புலிகள் உடனடியாக ஆயுதங்களைக் கைவிடாவிட்டாலும் பேச்சுவார்த்தைகளுக்கு அதனால் எந்த இடைஞ்சலும் ஏற்படாது.

எதிர்க்கட்சியில் ஒரு குரல்:- அவர்கள் உங்களுடன் சேர மாட்டார்கள். நீங்கள் தான் அவர்களுடன் சேர வேண்டிய நிலை உருவாகும்.

ரஞ்சன்:- வீணாக, தேவையற்ற பிரச்சினையைக் கிளப்பாதீர்கள்.

விடுதலைப் புலிகளுக்கு இப்போது தமிழ் ஈழ சிந்தனை இல்லை. வேறு சிந்தனை தான் இருக்கிறது.

பொலீஸ் நடவடிக்கைகளிலும் விடுதலைப் புலிகள் தலையிடவில்லை.

புலிகளிடம் ''கங்காரு'' நீதிமன்றங்கள் ஏதுமில்லை. அப்படிப் பத்திரிகைகளில் வந்த செய்திகள் தவறானவை.

அரசு — விடுதலைப் புலிகள் பேச்சுவார்தை முடிந்தவுடன் விரைவில் அது பற்றிய சகல விவரங்களும் சபையில் சமர்பிக்கப்படும். அதுவரை வீணாக இங்கு கூச்சல் எழுப்பாதீர்கள்- என்றார். (உ-2)

## ஹாட்லி- - -

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல இந்த இரு மாணவர்களும் தகுதிபெற்றுள்ளனர்.

ஏனைய எட்டு மாணவர்களது பெயர் விவரங்கள் வருமாறு:-

1. டபிள்யு. ஏ. என். டி. கே. விஜேநாயக்கா - அனுராதபுரம் மத்திய கல்லூரி.
2. பி. எம். எம்.எச். பிரேமரத்ன - பண்டாரவளை மத்திய கல்லூரி.
3. எம். பி. யு. பி. பி. நெலுந்தெனிய - சிலாபம் ஆனந்தாக் கல்லூரி.
4. எஸ். கே. செனவிரத்ன.
5. ஆர். பி. ஏ. ஜெயதிலக - இருவரும் டி. எஸ். சேனநாயக்க வித்தியாலயம்.
6. சி என். விக்ரமராச்சி - மாத்தறை ராகுல கல்லூரி.
7. என். பி. ஜி. டி. கே. பள்ளியகுரு - கண்டி மகளிர் உயர் கல்லூரி.
8. ஜி. எச். பி. ஹேமச்சந்திரா - பின்னவல மகாவித்தியாலயம். [உ-எ]

## புராதன . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரட்ணம் கூறுகிறார்.

இது போன்ற இன்னும் மூன்று கட்டடத் தொகுதிகள் இங்கு இருப்பதாக வேட்டையில் ஈடுபடும் இக் குழுவில் பங்கெடுத்தோர் கூறியுள்ளனர்.

செழியாவில் பிரதேசத்தில் உள்ள பழமையான சில இடப் பெயர்கள் புராதன யாழ்ப்பாண அரசின் தோற்றம் பற்றிப் புதிய சில கருத்துக்களைத் தருபவையாகவும் அமைந்துள்ளன.

எதிர்காலத்தில் இப்பிராந்தியத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் தொல்லியல் அகழ்வாய்வுகள் புதிய கருத்துக்களைத் தருபவையாக அமையும் — என்றும் திரு. புஸ்பரட்ணம் மேலும் தெரிவித்தார். (அ)

## "செடெக்" குழு

குருநகர், ஏப் 26

இலங்கையின் 10 மறைவட்டங்களிலும் சமூகப்பணி புரியும் 'செடெக்' நிறுவனத்தின் அதிபர் உட்பட 20 உறுப்பினர் கொண்ட குழு ஒன்று மே மாதம் 2 ஆம் திகதி வடபகுதிக்கு விஜயம் மேற்கொள்ள இருக்கிறது.

## ஆரம்ப- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இழப்புக்கு 242 ஓட்டங்களை பெற்று ஆட்டத்தில் வெற்றி பெற்றது.

ஏழாவது விக்கெட் இழந்த நிலையில் கடைசியாக ஜோடி சேர்ந்து, நிதானமாக 11 ஓவர்கள் விளையாடி 69 ஓட்டங்களைக் குவித்ததன் மூலம், இலங்கை அணித் தலைவர் அர்ஜுனா ரணதுங்காவும், ருமேஷ் ரட்ணாயக்காவும் தமது அணியின் வெற்றியை உறுதிப் படுத்தினர்.

அர்ஜுனா ரணதுங்க ஆட்டமிழக்காமல் 85 ஓட்டங்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

மீண்டும் இந்திய அணியில் விளையாடுவதற்காக அழைக்கப்பட்ட ஸ்ரீகாந்தும், ரவி சாஸ்திரியும் முறையே 19,9 ஓட்டங்களை மட்டுமே பெற்றனர். (உ)

## பொருளியல்

**ஆசிரியர் நா. கிருஷ்ணானந்தன்**

பிரபல பொருளியல் ஆசிரியர் மறைந்த நா. கிருஷ்ணானந்தன் நினைவாக செய்யப்படவுள்ள சேவைகள் தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் 27 - 04 - 90 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு Jaffna Technical Institute, Stanley Road (விக்னா ரியூசன் சென்ரருக்கு அருகில்) நடைபெறும்.

ஆசிரியர்கள், மாணவர்கள், நண்பர்கள், அபிமானிகள் ஆகியோரை அன்புடன் அழைக்கின்றோம்.

(C/4476)    நண்பர்கள்.

## பிராந்தியக் கல்லூரிகளில்

பிராந்தியக் கல்லூரிகளில் உயர் கல்விபெறும் மாணவருக்கு பட்டதாரி சான்றிதழுக்குப் பதிலாகடிப்ளோமா சான்றிதழே வழங்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

பல்கலைக்கழக அனுமதி பெறத் தகுதி பெற்றிருந்தும் அனுமதி கிடைக்காத மாணவர் உயர் கல்வி பெறுவதற்காகபிராந்தியக் கல்லூரிகளை நிறுவ உயர் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவது தெரிந்ததே. [உ-எ]

## இத்தாலி

இத்தாலியில் இந்த வருடம் (1990) உலக கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப் போட்டி நடைபெற இருப்பது யாவரும் அறிந்ததே. நீங்களும் நேரில் (இத்தாலியில்) கண்டு களிக்க விரும்பினால் எம்மை சந்தித்து முழு விபரங்களையும் அறிந்து கொள்ளுங்கள்

சந்திக்கும் நேரம்:-
காலை 9 மணி முதல் 12 மணிவரை
மாலை 3 மணி முதல் 5 மணிவரை

**10- 05- 1990 க்கு முன்பாக உங்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்**

யாழ். பிரதிநிதி:-
**P. P. Prahash,**
Old No: 168, Temple Road
New: No 366.
Nallur, Jaffna.

**Aravieentharaja**
TEL:- 71 - 2112
Colombo.

[இன்னும் சொற்ப பதிவுகளே இருக்கின்றன )
(12374)

## ஓராண்டு நினைவாஞ்சலி



**திரு. து. கந்தசாமி ஆச்சாரி**
[அவர்கள்]

தோற்றம்: 13-10-28    சிவபதம்: 7-5-89

**திதி: 26-4-90**

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இவரின் துயரால் வாடும்
மனைவி, மகள், மகன்மார்,
மச்சான்மார், மச்சாள்மார்,
தம்பிமார்.

90, சிவன்கோவில் வடக்கு வீதி,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.    (12361)

## சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்
## பதவி வெற்றிடங்கள்

கீழே குறிப்பிட்ட பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **வர்த்தகமுகாமையாளர்**
   வயது 23 — 40 வரை
   வேதனம் ரூபா 855 - 30x7 — 40x8 — 1385 ம் படிகளும்
2. **காசாளர்**
   வயது 20 — 35 வரை
   வேதனம் ரூபா 805 - 25x7 — 35x8 — 1260 ம் படிகளும்
3. **லிகிதர்**
   வயது 20 — 35 வரை
   வேதனம் ரூபா 700 - 15x10 — 20x5 — 950 ம் படிகளும்
4. **எரிபொருள் நிரப்புனர்**
   வயது 18 — 30 வரை
   வேதனம் ரூபா 700 - 15x10 — 20x5 — 950 ம் படிகளும்
5. **விற்பனையாளர்**
   வயது 18 — 30 வரை
   வேதனம் ரூபா 685 - 10x10 — 15x5 — 860 ம் படிகளும்
6. **ஏவலாளர்**
   வயது 18 — 30 வரை
   வேதனம் ரூபா 685 - 10x10 — 15x5 — 860 ம் படிகளும்

**விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி:- 08 — 05 — 90**

தராதரங்கள் மற்றும் தகைமைகள் பற்றிய விபரங்களை கீழ்க்காணும் விலாசத்திற்கு வந்து பெற்றுக் கொள்ளலாம். தபால்மூலம் பெறவிரும்பின் முத்திரையொட்டிய சொந்த முகவரியிட்ட கடித உறை அனுப்பப்பட வேண்டும்.

தலைவர்
சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்

பிரதான வீதி,
சாவகச்சேரி,
24 - 04 - 90    (சி-4327)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NESON'S
FUNERAL UNDERTAKERS
FLORIST
CASKET EMBALMING
FUNERAL COACHES
No: 563, HOSPITAL ROAD,
VEMBADI JUNCTION JAFFNA.

# உதயன்

26 - 04 - 1990 வியாழக்கிழமை

அந்தியகால சேவைக்கு உங்கள் அருகிலேயே இருக்கும் அன்பன்
"நேசன்ஸ்"
★ பிரேதப் பெட்டிகள்
★ ஊர்வல வாகனம்
★ மலர் வளையங்கள்
★ எம்பாமிங்
★ நேசன்ஸ் ★
(வேம்படிச் சந்தி)
563, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## மதிய போசனம் தயாரிப்பதில் ஆசிரியர், மாணவர் ஈடுபடத்தடை!

யாழ்ப்பாணம், ஏப். 26

பாடசாலைகளில் மதிய உணவு தயாரிப்பதில் ஆசிரியர்களோ, மாணவர்களோ ஈடுபடக்கூடாது என்று யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளர் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அறிவுறுத்தி உள்ளார்.

கல்வித் திணைக்கள அறிவித்தல் இன்றி அதிபர்கள் மதிய போசனம் வழங்குவதை நிறுத்தக் கூடாது என்றும், எந்தக் கட்டத்திலும் மதிய போசனத்தை நிறுத்துவதாயின் முன் அனுமதி பெற வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

★ மதிய போசன விநியோகத்தைச் சரிவர நடத்துவதற்கு ஆசிரியர்கள் கண்காணிப்புச் செய்ய வேண்டும்.

★ ஆனால் உணவு தயாரிப்பதில் ஆசிரியர்களோ, மாணவர்களோ ஈடுபடுதல் கூடாது.

★ மதிய போசன இடைவேளையின் போது எக்காரணம் கொண்டும் மாணவர்கள் பாடசாலையை விட்டு வெளியே செல்ல அதிபர்கள் அனுமதிக்கக் கூடாது.

★ மதிய போசனத்திற்கு ஒரு மணித்தியாலம் ஒதுக்கப்பட வேண்டும்.

★ மதிய போசன உணவுக் குழுவினர் நாள்தோறும் மேற்பார்வை செய்தல் வேண்டும்.

★ மதிய போசன உணவுக் குழுவில் அதிபர், சிரேட்ட ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் அங்கம் வகிக்க வேண்டும்.

இவ்வாறு சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைத்துள்ள சுற்று நிருபத்தில் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார். (அ-9)

## 2ஆம், 3ஆம் தவணை விடுமுறைத்திகதி மாற்றம்

கொழும்பு ஏப். 26

1990 ஆம் ஆண்டுக்குரிய பாடசாலைகளின் இரண்டாம், மூன்றாம் தவணைகளுக்கான விடுமுறைகள் கல்வி அமைச்சினால் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

மே 2 ஆம் திகதி ஆரம்பமாகும் பாடசாலைகள் ஆகஸ்ட் 5 ஆம் திகதி விடுமுறைக்காக மூடப்படும்.

மூன்றாம் தவணைக்காக செப்டம்பர் மாதம் 5 ஆம் திகதி மீண்டும் பாடசாலைகள் திறக்கப்பட்டு, நவம்பர் 30 ஆம் திகதி மூடப்படும்.

திருத்தப்பட்ட தவணை விடு முறை பற்றிய விவரங்கள் அடங்கிய சுற்று நிருபம் அமைச்சுச் செயலாளரால் பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள் மற்றும் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. [உ - எ]

## நகைக்கடை உரிமையாளர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப் 26

நகைக்கடை உரிமையாளர்களின் கூட்டம் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். வின்சர் திரையரங்கில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் சகல உரிமையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஒ)

## சைக்கிள்கள் யாருடையவை?

யாழ்ப்பாணம், ஏப் 26

கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடைபெற்ற இன்னிசைக் கச்சேரிக்கு நீங்களும் சைக்கிளில் சென்றீர்களா?

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் நடத்திய வாகனப் பாதுகாப்பு நிலையத்தில் அன்றையதினம் விடுபட்ட இரண்டு சைக்கிள்கள் இன்னமும் உரிமை கோரப்படாமல் உள்ளன

உரியவர்கள் அவற்றைத் தகுந்த அத்தாட்சி காட்டித் திருநெல்வேலி பரமேஸ்வாராச் சந்தியில் உள்ள விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. [அ]

## மே தின நிகழ்ச்சிகள்; புலிகளின் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஏப். 26

மேதினத்தன்று நடைபெற உள்ள கண்காட்சி, ஓவியக் கண்காட்சி, மற்றும் ஊர்திப் பவனி ஆகியவற்றில் பங்குபற்ற விரும்புபவர்கள் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி பிராந்திய செயலகத்துடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஊர்திகள், ஓவியங்கள் அனைத்தும் தொழிலாளர் எழுச்சி, மற்றும் கடந்தகால நிகழ்வுகள் என்பனவற்றைப் பிரதிபலிப்பவையாக அமைய வேண்டும் என அறிவுறுத்தப் பட்டுள்ளது.

ஓவியம், மற்றும் கண்காட்சியில் பங்குபற்ற விரும்புவோர் நாளை மறுதினம் 28ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன் கோண்டாவிலில் உள்ள முன்னணியின் யாழ். பிராந்திய அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-9)

## யாழ். மாவட்ட ஆசிரியர் பற்றிய விவரம்; திணைக்களம் கோருகிறது

யாழ்ப்பாணம், ஏப் 26

யாழ் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் கடமை புரியும் ஆசிரியர், தேவைப்படும் ஆசிரியர் போன்ற விவரங்களை யாழ். கல்வித் திணைக்களம் கோர உள்ளது.

இதற்கான சுற்று நிருபம் விரைவில் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பப்பட உள்ளன.

எதிர் வரும் 11 ஆம் திகதிக்கு முன்னர் இந்த விவரங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஒ-9)

## இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளையில் சனியன்று கொடுப்பனவுகள்

யாழ்ப்பாணம், ஏப் 26

இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளையில் 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் 1 மணி வரை பின் வரும் கொடுப்பனவுகள் வழங்கப் பட உள்ளன.

மீளக் குடியமர்தல் 2 ஆம் கட்ட நிவாரணம் ரூபா 1000/-

அரியாலை கிழக்கு, அரியாலை மத்தி, வண் வட மேற்கு, வண் வட கிழக்கு, கந்தர்மடம், நல்லூர்வடக்கு, திருநெல்வேலி மேற்கு, திருநெல்வேலி கிழக்கு, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் கிழக்கு, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் மேற்கு, கொக்குவில் மத்தி.

மீளக் குடியமர்தல் நிவாரணம் ரூபா 2000 :-

கொழும்புத்துறை, அத்தியடி, சுண்டுக்குழி, குருநகர் மேற்கு, குருநகர்கிழக்கு, யாழ் பட்டினம், பெரியகடை, கொட்டடி, நாவாந்துறை, சோனகதெரு, அரியாலை கிழக்கு அரியாலை மேற்கு, அரியாலை மத்தி, நல்லூர் வடக்கு, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் கிழக்கு கொக்குவில் மேற்கு, கந்தர் மடம்.

உற்பத்தித்திறன் முயற்சி நன்கொடை ரூபா 4000/-

கந்தர்மடம், திருநெல்வேலி கிழக்கு, கொக்குவில் மேற்கு, கொக்குவில் மத்தி, கோண்டாவில் கிழக்கு, வண் வட மேற்கு, வண் வடகிழக்கு, நல்லூர் தெற்கு, நல்லூர் வடக்கு, அரியாலை மத்தி,

மேற்படி கொடுப்பனவுகள் பெறத் தகுதியுள்ளவர் தங்கள்பகுதி கிராமசேவையாளர்களுடன் தொடர்பு கொண்டு வங்கிப் பதிவு இலக்கத்தைப் பெற்று வருமாறு வங்கி முகாமையாளர் திரு. செல்லப்பா சம்பந்தநாதன் அறிவித்துள்ளார். [இ]

## வடமராட்சி மக்களுக்கு ரூபா 1,000 கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஏப். 26

இலங்கை வங்கியின் பருத்தித்துறை, நெல்லியடி கிளைகளில் மீளக்குடியமர்தல் நிவாரணம் ரூபா ஆயிரம் வழங்கப்பட இருக்கிறது.

நாளை 27 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை பருத்தித்துறை கிளையிலும், 28 ஆம், 29 ஆம் திகதிகளில் நெல்லியடிக் கிளையிலும் இந்த நிவாரணப் பணம் வழங்கப்படும்.

### பருத்தித்துறை

நாளை பருத்தித்துறை கிளையில் வழங்கப்பட உள்ள கிராம சேவையாளர் பிரிவுகள் வருமாறு:-

வல்வெட்டித்துறை தெற்கு, வல்வெட்டித்துறை வடக்கு, தொண்டமனாறு, பொலிகண்டி கிழக்கு, பொலிகண்டி மேற்கு, கெருடாவில் வடக்கு, கெருடாவில்தெற்கு, அல்வாய் வடக்கு, அல்வாய் மேற்கு.

### 28 ஆம் திகதி

28 ஆம் திகதி பருத்தித்துறை கிளையில் வழங்கப் படும் பகுதிகள்:-

வியாபாரிமூலை, பருத்தித்துறை, பருத்தித்துறை கிழக்கு, புலோலி கிழக்கு, புலோலி தெற்கு, புலோலி மேற்கு, தும்பளை.

### 29 ஆம் திகதி

29 ஆம் திகதி பருத்தித்துறைகிளையில் வழங்கப்படும் பகுதிகள்:-

மந்திகை, வல்லிபுரம், அத்பன், குடத்தனை, குடம்தனைகரையூர், கற்கோவளம், சுண்டிக்குளம், நாகர் கோவில் தெற்கு, நாகர் கோவில் வடக்கு, துன்னாலை வடக்கு.

### நெல்லியடியில்

28 ஆம் திகதி இலங்கை வங்கி நெல்லியடிக் கிளையில் நிவாரணம் வழங்கப்படும் பகுதிகள்:-

கரணவாய் வடக்கு, கரணவாய் தெற்கு, கரணவாய் மேற்கு, கரவெட்டி மத்தி.

29 ஆம் திகதி: வல்வெட்டி, கரவெட்டி தெற்கு, கரவெட்டி வடக்கு, கரவெட்டி கிழக்கு, கரவெட்டி மத்தி. (ஒ)

## ரைபிள் படை

புதுடில்லி, ஏப் 20

ஓய்வு பெற்ற இந்திய இராணுவ வீரர்களைக் கொண்ட இந்தியரைபிள் படை ஒன்றை அமைக்கப்போவதாகபிரதமர் வி. பி. சிங் அறிவித்தார்.

ஓய்வு பெற்ற இந்திய இராணுவ வீரர்கள் பதினொரு லட்சம் பேர் இந்தியாவில் உள்ளனர்.

புதிய ரைபிள் படை உள்நாட்டில் பொலீஸாருக்கு உதவியாகச் செயல்படுவர் என்றும் திரு. சிங், ஓய்வு பெற்ற இந்திய இராணுவ வீரர் மத்தியில் பேசுகையில் குறிப்பிட்டார். [எ]

## சட்டவிரோத மின்சார தடுப்பு: புலிகள் முயற்சி தொடரும்

யாழ்ப்பாணம் ஏப். 26

சட்ட விரோத மின்பாவனையை தடுக்கும் முயற்சியில் தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்ந்து ஈடுபட உள்ளனர். மின்சரா சபை ஊழியர்களுடன் இணைந்தே விடுதலைப் புலிகள் நடவடிக்கை எடுப்பர் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ - 9]

## வர்த்தக சங்கத்தில் சேர விடுதலைப்புலிகள் அழைப்பு

யாழ்ப்பாணம் ஏப். 26

சகல வர்த்தக நிலையங்களும் யாழ் மாவட்ட வர்த்தகர் சங்கத்தில் அங்கத்தவராகச் சேர்ந்து கொள்ள வேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வர்த்தக நிலையங்கள் அனைத்தும் ஒன்றாக இணைந்து ஒரே குடையின் கீழ் இயங்க ஒத்துழைப்பு வழங்கும் படியும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. [இ - 9]

## பரந்தனில் மீண்டும் குளோறின் உற்பத்தி!

### இறக்குமதி நிறுத்தப்படும்

கொழும்பு, ஏப் 26

குளோறின் இறக்குமதியை நிறுத்த அரசு தீர்மானித்துள்ளது.

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை மீண்டும் கடந்த 21 ஆம் திகதியில் இருந்து இயங்கத் தொடங்கி உள்ளது,

இனி குளோறின் இத்தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும்.

ஆகவே குளோறின் இறக்குமதி நிறுத்துவது என்று அரசு முடிவு செய்துள்ளது.

பரந்தன் தொழிற்சாலை உற்பத்திசெய்யும் குளோறின் எதிர்வரும் ஜூன் மாதம் சந்தைக்கு வரவுள்ளது.

பரந்தன் ஆலை மூடப்பட்டுக் கிடந்ததால் தண்ணீரைச் சுத்திகரிப்பதற்குத் தேவையான குளோறின் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு வந்தது. [உ.எ]

## பாம்பின் வேட்டுக்கு வேட்டைக்காரன் பலி!

நிக்கோஸியா ஏப் 25

பாம்பு ஒன்று ஒரு வேட்டைக்காரனைச்சுட்டுக்கொன்றது.

நம்ப முடிகிறதா?

ஈரானின் இர்னா செய்தி ஏஜென்ஸி இச் செய்தியை வெளியிட்டிருக்கிறது.

நடந்தது இது தான்:-

வேட்டைக்காரனான 27 வயதான அலி அஸ்கர்அஹானி பாம்பு ஒன்றைப் பிடிக்க முயன்றார்.

பாம்பு அவர் பிடியில் இருந்து தப்பி அவர் வைத்திருந்த ரைபிளின் பின் பக்கத்தைச் சுற்றிக் கொண்டது.

அப்போது ரைபிளின் விசை அழுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து ரைபிளில்இருந்து பாய்ந்த குண்டுக்கு வேட்டைக்காரன் இரையானான்.

பொலீஸார் விசாரணை நடத்துகின்றனர். பாம்புக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை.

சக வேட்டைக்காரர் ஒருவரை ஆதாரங்காட்டி 'இர்னா' இச் செய்தியை வெளியிட்டது. (உ-எ)

## பனை அபிவிருத்தித் துறையில் ஆராய்ச்சி மேற்கொள்ள வேண்டும்

### அமைச்சர் ரஞ்சன் கூறுகிறார்

கொழும்பு, ஏப்ரல் 26

பனை அபிவிருத்தித்துறையில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட வேண்டும்.

பனை அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள் மத்தியில் பேசுகையில் பெருந்தோட்டத் தொழிற்றுறை அமைச்சரும் பாதுகாப்புத்துணை அமைச்சருமான ரஞ்சன் விஜேரத்தினா மேற்கண்டவாறு கூறினார்.

இக்கூட்டத்தில் ஐ நா அபிவிருத்தித்திட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

அமைச்சர் அப்போது சொன்னதாவது;

நாட்டில் 36பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவற்றில் 50 ஆயிரம் பேர் உறுப்பினர்களாக உள்ளனர்.

சுமார் 65 ஆயிரம் குடும்பங்கள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பனம்பொருள் கைத்தொழிலில் ஈடுபட்டு உள்ளனர்.

வட பகுதியில் உள்ள வரண்டபிரதேசத்தில் பனைச் செய்கை மேற்கொள்ளப்பட வேண்டும். இலாபமும் அடையாது, நட்டமும் அடையாத விதத்தில் பனை விதைகள் விநியோகம் செய்யப்பட வேண்டும்.

கள்ளிறக்கும் தொழிலாளருக்குப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

உள்ளூர்ச் சந்தை வாய்ப்புடன் பனம்பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வாய்ப்பையும் ஏற்படுத்த வேண்டும்.

இப்படி அமைச்சர் விஜேரத்தினா சொன்னார்.

பெருந்தோட்டச் சேவைகள் அமைச்சர் எம். எல். எம் அபுசாலி உட்பட அரசு அதிகாரிகளும் கூட்டத்தில் கலந்து கொண்டனர். (இ-எ)

## இன்று செயலகத்தில் முத்திரையிடல்

கொழும்புத்துறை, ஏப் 26

யாழ். செயலகத்தில் இன்று வியாழக்கிழமை நிறுவைகள், அளவைகள் கருவிகளுக்கு காலை 8. 30 மணி தொடக்கம் முத்திரையிடும் (சீல்) வேலைகள் நடைபெறவுள்ளன.

திருநெல்வேலிச் சந்தை மற்றும் அப்பகுதி வியாபாரிகள் அனைவரும் தங்கள் சகல தராசுப்படிகள், மீற்றர், லீற்றர், அளவைகள், மேடைத்தராசு, தூக்குத் தராசுகள் போன்றவற்றுக்குத் தவறாது முத்திரை இட்டுக்கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர். [illegible]

## குடிதண்ணீர் விநியோகிக்க யாழ். மாநகரசபை திட்டம்

குருநகர், ஏப் 26

குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடான கிராமங்களுக்கு உடனடியாக குடிதண்ணீரை விநியோகிப்பதற்கு யாழ். மாநகர சபை புதிய திட்டம் ஒன்றை செயற்படுத்தத் தொடங்கியுள்ளது.

அத்தகைய கிராமங்களில் தண்ணீர்த் தொட்டிகளை நிறுவி 'பவுசர்' மூலமாக தண்ணீரைக்கொண்டு சென்று நிரப்பி விடுவதன் மூலம் அந்தந்தப் பகுதி குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க முடியுமென ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் தெரிவித்தார்.

இதற்கு அந்தந்தப் பகுதிகளில் இயங்கும் பொதுச் சேவை மன்றங்கள் குறிப்பாக சனசமூக நிலையங்கள் உதவ முடியும் என்றும் அவர் கூறினார்.

யாழ்- மாநகரசபை வழங்கும் சிமெந்து, கம்பி, மணல், [illegible] அடிப்படையில் தண் [illegible] றங்கள் நிறுவ முன்வர வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இவ்வாறான ஒரு திட்டம் நாவாந்துறை - வசந்தபுரம் அண்ணா சனசமூக நிலையத்தின் ஊடாக நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும், அத்திட்டத்தை நடைமுறைப்படுத்த ஏறத்தாழ ஐயாயிரம் ரூபா வரை யாழ் - மாநகர சபைக்கு செலவு ஏற்படுவதாகவும் ஆணையாளர் தெரிவித்தார். (க-51)

## ஜப்பான் பயணம்

மானிப்பாய், ஏப் 26

கால்நடை வளர்ப்பு,உணவு பதனிடல் ஆகிய துறைகளில் ஜப்பானில் மேலதிகப் பயிற்சி பெறுவதற்காக மருதனாமடம் யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தைச் சேர்ந்த தெய்வேந்திரம் விக்கினேஸ்வரன் ஜப்பான் பயணமானார். (ப-90)

## மரண அறிவித்தல்

### ஜோசப் மாணிக்கசிங்கம் சாண்டேர்ஸ்

சாவகச்சேரி ஜோசப் மாணிக்கசிங்கம் சாண்டேர்ஸ் (இளைப்பாறிய கூட்டுறவு உதவி ஆணையாளர்) அவர்கள் காலமாகிவிட்டார்.

இவர் காலம்சென்ற திருமதி சிறோன்மணி சாண்டேர்ஸ் அவர்களின் அன்புக் கணவரும், திருமதி ரோகினி பாலறஞ்சன், திருமதி வினோதினி புஸ்பராஜா, திரு. செல்வரட்ணம் சாண்டேர்ஸ், திரு. மோகன் சாண்டேர்ஸ் ஆகியோரின் அன்புத்தந்தையும், திரு. ந. பாலறஞ்சன், திரு. ரோ. புஸ்பராஜா, திருமதி சியாமளா சாண்டேர்ஸ், திருமதி சுதா சாண்டேர்ஸ் ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனை 27-04-1990 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு சாவகச்சேரி தபாலக வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் நல்லடக்கத்திற்காக சாவகச்சேரி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
ந. பாலறஞ்சன்
[12965]

தபாலக வீதி,
சாவகச்சேரி.

எமது புதிய வெளியீடுகள்

நாகார்ஜுன் — ராதா
★ நியாயத்தை திருடாதே ★
(ஒறிஜினல்)

கார்த்திக் — சித்தாரா — ராதாரவியின்
உன்னைச் சொல்லிக் குற்றமில்லை

அர்ஜுன் — வெண்ணிலா — ஓமக்குச்சியின்
பட்டிக்காட்டு வீரன்

117
மானிப்பாய் வீதி
ஐந்துசந்தி
யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர்வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 26 - 04 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org